Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-20+II

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-09 23-05-2005 திங்கட்கிழமை ஓசை 94



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் நமக்கென தனியிடம் பதித்தவர்கள்

பஜார் வீதி, வவுனியா.

யாழ்ப்பாணம்.

(சி-11750)

# திருமலையில் பதற்றத்தை உடன் கட்டுப்படுத்துக; தவறினால் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம்!

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எச்சரிக்கை

(திருகோணமலை)

**திருகோணமலையில் அண்மைக்காலமாகத் தோன்றியிருக்கும் பதற்றநிலையை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரா விட்டால், அது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் இருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலட்ஸ்டொவ்டிர், நிலைமை மோசமடைவதைத் தடுத்து நிறுத்துவதற்காக தாம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடனும், மாவட்ட அரசியல் தலைவர்களுடனும், மதத் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டு பேசிவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை திருகோணமலை கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற கூட்டமும், பிரச்சினையுடன் சம்பந்

(20ஆம் பக்கம் பார்க்க)

## எழுத்தாளர் செம்பியன்செல்வனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்



ஈழத்தின் புகழ் பூத்த, சிறுகதை நாவலாசிரியரான செம்பியன் செல்வன் என்று அழைக்கப்படும் அமரர் ஆறுமுகம் இராஜகோபால் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

செம்பியன் செல்வன் அவர்கள் தனது எழுத்தாலும் செயலாலும் இது வரை காலமும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றி வந்த பணிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவே நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலை கேணியடியில் மற்றொரு புத்தர் சிலை அமைப்பு!

## நேற்றுப் பகல் படையினரால் அகற்றல்

(திருகோணமலை)

திருமலை உப்புவெளி வீதியில் கேணியடி என்னுமிடத்தில் சனிக்கிழமை இரவோடிரவாக நிறுவப்பட்ட புத்தர் சிலையை நேற்றுப் பகல் 11.30 மணியளவில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து அகற்றியுள்ளனர்.

இம் மாதம் 15 ஆம் திகதி இரவோடிரவாக திருகோணமலை பேருந்து நிலையத்திற்கு அருகில் மணிக்கூட்டு கோபுரமுள்ள சந்திக்கு முன்னால் மூன்று அடி பீடத்தில் வைக்கப்பட்ட நான்கு அடி உயரப் புத்தர் சிலை அகற்றுவது தொடர்பான சர்ச்சைக்கு சனாதிபதியின் தீர்க்கமான முடிவை பாதுகாப்பு அமைச்சு எதிர் பார்த்திருக்கும் நிலையில் கேணியடியில் புதிதாக இன்னுமொரு புத்தர் சிலை அமைக்கப்பட்டதைப் பொலிசார் உயர்மட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அதனையடுத்து படையினரும் பொலிசாரும் சனிக்கிழமை இரவு வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றிவிட்டனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை பேருந்து நிலையம் அருகில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுக்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த நால்வர் ஆயுதங்களுடன் நேற்றுக் கைது

(கொழும்பு)

கருணா குழுவைச் சேர்ந்தவர்களென்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேரை ஆயுதங்களுடன் புத்தளம் பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

புத்தளம் மாவட்டம் சாலிவேவா பகுதியிலுள்ள பொலிசாரின் வீதிச் சோதனைச் சாவடியில் வைத்தே இந்த நான்கு பேரும் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடையில் இருந்து வாடகை வாகனம் ஒன்றில் அநுராதபுரம் ஊடாகப் பயணம் செய்து கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நில ஆக்கிரமிப்பு; உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

யாழ்.பேருந்து நிலையத்தை அண்டியுள்ளதனதுநிலத்தைஉயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிற்பதை எதிர்த்து யாழ். சட்டத்தரணி பி.வி.சிறீரஞ்சன் சிறிலங்காவின் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நீதவான்கள் வீரசூரிய, திசநாயக்க, அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சிறீரஞ்சன் தனது வழக்கு மனுவில் யாழில் பவர் ஹவுஸ சாலை என்ற சி.பொன்னம்பலம் சாலையில் எண் 187 மற்றும் 189 ஆகிய இடங்களில் தனது நிலம் உள்ளது. இது யாழின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. யாழ். பேருந்து நிலையத்திலிருந்து பத்து மீற்றர் தொலைவிலும் யாழ். பொது வைத்தியசாலைக்கு மிக அருகாமையிலும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலையின் தலை பொலிஸ் நிலையம் முன் வீச்சு

(திருமலை)

திருகோணமலை கடற்கரையில் அமைந்திருந்த புத்தர் சிலை ஒன்றின் தலை சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தின் முன்னால் வீசப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு இப்புத்தர் சிலையின் தலையைச் சேதப்படுத்திய இனந்தெரியாத குழுவொன்று அந்த தலையினை பொலிஸ் நிலையத்தின் முன்னால் வீசிவிட்டுச் சென்றுள்ளது. (32)

## வீரவணக்கம்

20-05-2005அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ நாட்டுப்பற்றாளர் இராஜகோபால் ( ஆறுமுகம் இராஜகோபால், புதிய அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.

☐ ☐ ☐

22-05-2005அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ நாட்டுப்பற்றாளர் தனபாலசிங்கம் (சதாசிவம் தனபாலசிங்கம், அல்வாய் மேற்கு, திக்கம், பருத்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக்கு மேலதிக படையினர் நேற்று அனுப்பிவைப்பு

(திருமலை)

திருகோணமலைக்கு மேலதிக படையினரும், பொலிசாரும் நேற்றுப் பாதுகாப்புக் கடமைகளுக்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். சுமார் 1500 படையினரும், பொலிசாரும் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி திருகோணமலை நகரில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டதையடுத்து அங்கு தொடர்ச்சியாகப் பதற்றம் நிலவுவதுடன் கதவடைப்புப் போராட்டமும் நடத்தப்பட்டு வந்தது. ஊரடங்குச்சட்டமும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில்அங்கு பாதுகாப்புக்காக மேலும் படையினரும் பொலிசாரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (25)

## மூன்று தமிழ் இளைஞர்கள் கண்டியில் நேற்று கைது

(கொழும்பு)

கண்டி நகரில் மூன்று தமிழ் இளைஞர்கள் கண்டி குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் மாத்தளை களுதாவளையைச்சேர்ந்தவர் என குறிப்பிட்டுள்ள பொலிசார் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என்றும் ஆனையிறவுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் எனவும் தெரிவித்துள்ளனர். ஏனைய இருவரில் ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் மற்றும் ஒருவர் மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்தவர் என்றும் கண்டிப் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும். பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P 021-2285750 (சி.11869)

### விசேட ஆங்கில வகுப்புக்கள் GRAMMAR& SPOKEN

O/L, A/L மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்- புதன்,சனி,ஞாயிறு மாலை 5-6 மணி, இடம்-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் கிழக்கு. ஆசிரியர்-K.YOKAN (BBAA&NDe) (6141)

### தவறிவிட்டது

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் சமயூரன் என்பவரது சேமிப்பு புத்தகம், டயரி மற்றும் ஆவணங்கள் என்பன கிளிநொச்சிக்கும் 55ஆம்கட்டைக்கும் இடையில் பஸ்சில் தவறிவிட்டது. இதனைக் கண்டெத்தவர்கள். ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றது.

### கண்டெடுப்பு

திருகோணமலையை சேர்ந்த அருமைத்துரை ஜெகதீசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.812034979-) மற்றும் இரு திறப்புகள் என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# எமது தேசவிடுதலையை வென்றெடுக்க தலைவரின் கரத்தை பலப்படுத்துவோம்

## -பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உறுதி

(அலுவலகசெய்தியாளர்)

எமது தேச விடுதலையை வென்றெடுக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு தமிழீழத் தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்துவோமென கிளிநொச்சி மாவட்டபொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உறுதியெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டதேசிய எழுச்சிப்பேரவையின்ஏற்பாட்டில் தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற சமகாலக் கருத்தரங்கில் இந்த உறுதிமொழியெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் நேற்று காலை 9.30 மணிக்கு மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.



இந் நிகழ்வில் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா. கிளிமாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச துணை அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றினார்.

இதில் சிறப்புக் கருத்துரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார். முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப்பொறுப்பாளர் ஈழவன் உட்பட ஊரக, கோட்ட, மாவட்ட, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர். (20)

# அரசின் அராஜக யுத்தத்தை முறியடித்தாலே தேச விடுதலையை வென்றெடுக்க முடியும்

## -தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சுரேஸ்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா அரசு எம் மக்கள் மீது நயவஞ்சகத் தனமான முறையில் மேற்கொண்டுள்ள அட்டூழியங்கள் மற்றும் அராஜகயுத்தம் என்பனவற்றை முறியடித்தாலே எமது தேச விடுதலையினை வென்றெடுக்க முடியும் என தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சுரேஸ் தெரிவித்துள்ளார்.

கிளி. மாவட்ட பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் நேற்று இடம்பெற்ற சமகால கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் மேலும் தெரிவிக்கையில்:-

எமது கடந்த கால நடவடிக்கையின் போது எம்மக்கள் போராளிகளுடன் இணைந்து தோளோடு தோள் நின்று பல வெற்றிகளை வென்றெடுத்ததென்பது வரலாற்று உண்மை. எனவே இனியும் எதிரியின் நயவஞ்சகத்தினை நம்ப நாம் எவரும் தயாரில்லை என்பதனை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் காலம் கனிந்து விட்டது இதனை நாம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சோ)

# பாடசாலைகளின் குறைகளைத்தீர்க்க பாராளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் குறைபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் மேற்கொண்டுவருகிறார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகள்மீது சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் புறக்கணிப்பு நடவடிக்கைகள் காரணமாக இங்குள்ள பாடசாலைகள் பலவும் வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றன.

இதனால் இவ்வாறான பாடசாலைகளில் பயின்று வரும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலைமையை கவனத்தில் கொண்டே பாராளுமன்றஉறுப்பினர் சிவாஜிலிங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அந்த அடிப்படையில் தத்தமது பாடசாலைகளில் நிலவும் தளபாடம், கட்டடம் மற்றும்ஆளணிப் பற்றாக் குறைகள் பற்றிய விபரங்களை தனக்கு அறியத்தருமாறு பாடசாலை அதிபர்களை சிவாஜிலிங்கம் கோரியுள்ளார். (33)

# வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு சோதனைச் சாவடிகள் முழுநேரம் திறப்பு

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று இரு சோதனைச்சாவடிகளுமே முழு நேரமும் திறந்து இருக்குமென முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். முகமாலை, ஓமந்தை ஆகிய இரு சோதனைச் சாவடிகளுமே இன்று நடைபெறும் இந்த ஆலய உற்சவத்திற்காக விசேடமாக திறந்து வைக்கப் பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (20)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கையெடுக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். அரசாங்க அதிபரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமான வீதி அமைப்புக் குறைபாடுகளைப் போக்குமாறும், வீதிச் சமிக்ஞைக் குறியீடுகள், வீதியோர மின் விளக்குகள் என்பனவற்றைப் பொருத்துமாறும் வீதி விபத்துக்களுக்குக் காரணமான கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துமாறும் இராசையா சகல பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகளுக்கும் பணிப்புரை விடுததுள்ளார்.

இந் நடவடிக்கைகளை யாழ். மாவட்டம் முழுவதிலும், துரிதப்படுத்துமாறும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (33)

# உணவகங்களில் சுகாதாரம் பேணல் யாழ் மாநகர சபை தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியிலுள்ள உணவகங்களின் உணவுச் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளை யாழ். மாநகரசபையின் சுகாதாரப்பிரிவினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்நகரப்பகுதியிலுள்ள உணவகங்களில் உரிய முறையில் உணவு பேணப்படுவதில்லையென பலராலும் தெரிவிக்கப்பட்டு வந்ததைத் தொடர்ந்து யாழ்மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் சேவைப் பணிப்பாளர் உணவகங்களின் சுகாதார நிலைமைகளை தீவிரமாகக் கண்காணிக்குமாறு சகல சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் உத்தரவிட்டிருந்தார்.இந்த அடிப்படையில் யாழ். மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் குழு கடந்த சில நாட்களாக உணவகங்கள் மீதான சுகாதாரக் கண்காணிப்புகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதன் போது பாவனைக்குதவாத நிலையிலிருந்த ஏராளமான உணவுப் பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன. (33)

# சாவு அறிவித்தல்

## நாட்டுப்பற்றாளர்

## திரு.சதா-தனபாலசிங்கம்

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.739 சிவிச் சென்ரர் வட்டக்கச்சியில் தற்போது வசித்து வந்தவருமாகிய சதாசிவம் - தனபாலசிங்கம் ( ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் கண்டாவளை),(தலைவர் வடக்கு கிழக்கு மேம்பாட்டு நிறுவனம்), (முன்னாள் தலைவர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கிளிநொச்சி, முல்லைத்தீவு) அவர்கள் 22.05.2005 அன்று (ஞாயிறு) சாவடைந்து விட்டார்.

இவர் சாவடைந்தவர்களான சதாசிவம் - வள்ளிமுத்து ஆகியோரின் அன்பு மகனும், மாணிக்கத்தின் அன்புக் கணவரும், அருணாவின்(தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி) அன்புத் தந்தையும், சாவடைந்தவர்களான கதிரேசு, இரங்கநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் மற்றும் குணபாலசிங்கம், சாவடைந்தவர்களான கந்தையா, அற்புதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா (கொழும்பு), செல்லத்துரை(திக்கம்), நாகேஸ்வரி வட்டக்கச்சி, தவமணி(கோப்பாய்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.05.2005 அன்று மாலை 3.00 மணிக்கு அன்னாரின் வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பன்னங்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-மனைவி-மகன்
739, சிவிச்சென்ரர்
வட்டக்கச்சி.

(சி.11782)

# சதாமின் படங்களை மேலும் வெளியிட்டு இங்கிலாந்தின் "சன்" பத்திரிகை பரபரப்பு



அராபிய தினசரி ஒன்றில் சதாம் உசேனின் உருவப்படம் பொறிக்கப்பட்ட செய்தியை வாசிக்கும் ஈராக்கியர்கள் • இந்தப் புகைப்படம் எவ்வாறு வெளியிடப்பட்டது என்பதை ஆராய்வதில் அமெரிக்க இராணுவம் தீவிரமாகி வருவது குறிப்பிடத்தக்கது.

(லண்டன்)

**ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் அரை நிர்வாணமாக இருப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய பிரிட்டனைச் சேர்ந்த 'சன்' பத்திரிகை சதாம், கெமிக்கல் அலி, சதாமின் கொடூர உயிரியல் ஆயுதங்கள் தயாரிப்புக்கு துணை புரிந்த "மிசஸ் ஆந்த்ராக்ஸ்'' ஆகியோர் சிறையில் இருப்பது போன்ற மேலும் மூன்று படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனும், அவருடைய ஆட்சியில் கொடி கட்டிப் பறந்த அவரது அமைச்சர்கள்,, உதவியாளர்கள், முக்கிய பதவிகள் வகித்தவர்கள் எல்லோரும் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ரகசிய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையில் சதாம் உள்ளாடையுடன் துணி துவைப்பது போன்ற புகைப்படத்தை பிரிட்டனைச் சேர்ந்த சன் பத்திரிகை இரு தினங்களுக்கு முன் வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தியது. போர்க் கைதிகளை நடத்த வேண்டிய ஜெனிவா விதி முறைகளை மீறி சிறையில் சதாம் நடத்தப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அமெரிக்க இராணுவத்தின் முழு கட்டுப்பாட்டில் உள்ள சிறையில் இருந்து சதாமின் புகைப்படங்கள் எப்படி எடுக்கப்பட்டது? அவை பிரிட்டன் பத்திரிகைக்கு எப்படிச் சென்றன என்ற மர்மம் அமெரிக்க இராணுவத்தை ஆட்டிப் படைக்கிறது. இதற்கு காரணமானவர்களைக் கண்டு பிடித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் அறிவித்துள்ளனர். மேலும் புகைப்படங்களை வெளியிட்ட சன் பத்திரிகை மீதும் அமெரிக்க இராணுவம் பாய்ந்துள்ளது.

இந்த சலசலப்புக்கு எல்லாம் பயப்படாத சன் பத்திரிகை நேற்று முன்தினம் மேலும் மூன்று புதிய புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. ஒரு புகைப்படத்தில் சதாமும், மற்ற இரண்டு புகைப்படங்களில் சதாமின் நெருங்கிய உறவினரும், கொடூர மனிதருமான 'கெமிக்கல் அலியும் சதாமின் பயங்கர உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்க உதவியாக இருந்த பெண் விஞ்ஞானியான ஹூடா செலி மெதி அம்மாஸ் (எ) மிசஸ் ஆந்த்ராக்ஸ்சும் உள்ளனர்.

கம்பியால் வேயப்பட்ட முள்வேலிக்கு அருகில் உள்ளங் கைகளை விரித்து தலையை கவிழ்ந்து இருப்பது போன்று புகைப்படத்தில் சதாம் இருக்கிறார். அனேகமாக சிறை வளாகத்தில் அவர் தொழுகை நடத்தும் போது இப் படம் எடுக்கப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அதே போல் ஊன்று கோலுடன் கெமிக்கல் அலி நிற்கிறார். சதாமுக்கு எதிராக செயற்பட்ட ஆயிரக்கணக்கான குர்திஷ் இன மக்களை இரசயான விஷப் புகைகளைப் பயன்படுத்தி கொன்றமைக்கு இவரே காரணமாகும். சிறை வளாகத்தில் மிசஸ் ஆந்த்ராக்ஸ் நடந்து செல்வது போன்ற புகைப் படம் வெளியாகியுள்ளது.

அமெரிக்க இராணுவம் கண்டித்த போதும் இப் புகைப்படங்கள் வெளியிடப்படுவதை சன் பத்திரிகை நியாயப்படுத்தியிருக்கிறது. சதாம் கெமிக்கல் அலி போன்றவர்களுக்கு எந்த வகையிலும் கருணை காட்டக்கூடாது. சதாம் யாருடைய இரக்கத்திற்கும் ஏற்றவர் அல்ல. அவருடைய ஆட்சியில் மூன்று லட்சம் அப்பாவி மக்கள் காணாமற் போயிருக்கின்றனர் என்று தனது கட்டுரையில் சன் கூறியுள்ளது.

## தஞ்சம் கோருவோர் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இவ்வாண்டு வீழ்ச்சி

(ஜெனிவா)

வளர்ந்த நாடுகளில் தஞ்சம் கேட்டு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்றில் ஒரு பகுதியாக குறைந்து விட்டது என்று ஐ.நா சபை கூறியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் புகலிடம் கேட்டு, 81,947 பேர் மனுச் செய்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட 17 சதவீதம் குறைவாகும். 2003 ஆம் ஆண்டை விட 36 சதவீதம் குறைவாகும். 2003 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 630 பேர் புகலிடம் கேட்டு மனுச் செய்திருந்தனர்.

அமெரிக்காவில் அடைக்கலம் கோருவது தான் மிக அதிக அளவில் உள்ளது. அதாவது 13 ஆயிரத்து 600 உள்ளது பேர் மனுச் செய்துள்ளனர்.

இரண்டாவதாக இங்கிலாந்திடமும், மூன்றாவதாக ஜேர்மனியிடமும் அதிக அளவில் அடைக்கலம் கேட்டு மனுக்கள் வந்துள்ளன.



பஹுஜாவிலுள்ள தனது முகாமில் நிலை எடுத்துள்ள அமெரிக்கக் கடற்படையினர்.

## தந்தைக்குப் பின் அதிபராகும் எண்ணமில்லை சைபல் அல் இஸ்லாம் கடாபி வலியுறுத்துகிறார்

தந்தைக்குப் பிறகு அதிபராகும் எண்ணமில்லை என்று லிபிய அதிபர் கடாபியின் மகன் சைபல் அல் இஸ்லாம் கடாபி அறிவித்துள்ளார்.

ஜோர்டான் அதிபராக மும்மர் கடாபியுள்ளார். கடந்த 1980ஆம் ஆண்டு லிபியா தாக்கப்பட்டது. அதன் பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் அதிபர் கடாபி மோதல் போக்கை கையாளத் தொடங்கினார். அவரது மகன் திரை மறைவாக செயற்பட்டு கடாபியை சமாதானப்படுத்தி அந், நாடுகளுடன் மீண்டும் உறவை புதுப்பிக்க வழி வகுத்தார். இழப்பீடுகளையும் பெற்றுத் தந்தார்.

உலகப் பொருளாதார மையம் சார்பில் ஜோர்டானில் கருத்தரங்கு நடந்தது. அதில் இஸ்லாம் கடாபி பேசியதாவது;

என் தந்தைக்குப் பிறகு அதிபர் பதவிக்கு வரும் எண்ணம் எனக்கில்லை. சில வேளைகளில் முற்போக்கு சிந்தனையுடன் விரைந்து செயற்படும் வழக்கம் எனக்குள்ளது. லிபியாவில் நான் பிரபலமான நபரும் அல்ல. மக்கள் என்னை அதிபராக ஏற்பார்கள் என்று நான் கருதவில்லை. நானும் என் தந்தையும் இதுபற்றி பேசியதில்லை என்னை அரசியல் வாரிசாக உருவாக்க அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

எண்ணெய் வளம் மிகுந்த லிபியாவுக்கு அமெரிக்காவுடன் உறவு சீரடைந்து வருகிறது. விரைவில் தூதரக உறவுகள் ஏற்படும் என நம்புகிறேன். அமெரிக்காவும் லிபியாவும் நல்ல நண்பர்களாக இல்லாமல் இருந்திருக்கலாம். இரு நாடுகளும் எதிரிகள் அல்ல. இவ்வாறு இஸ்லாம் கடாபி கூறியுள்ளார்.

## ஆப்கான் கைதிகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அமெரிக்காவுக்கு அதிபர் கர்சாய் கோரிக்கை

(காபூல்)

"ஆப்கான் கைதிகளை அமெரிக்கா எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். எங்கள் நாட்டில் செயற்படுபவர்கள் அமெரிக்க இராணுவத்தின் செயற்பாடுகள் அனைத்தும் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டும்'' என்று ஆப்கானிஸ்தான் அதிபர் கர்சாய் வலியுறுத்தியிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை அகற்றிய அமெரிக்க இராணுவம, தொடர்ந்து அங்கேயே தங்கி இருந்து தலிபான்களை தலையெடுக்க விடாமல் தடுத்து வேட்டையாடி வருகிறது. ஆப்கானில் கிட்டத்தட்ட 18 ஆயிரத்து 300 அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கியிருந்து பாதுகாப்புப் பணிகளைச செய்து வருகிறார்கள்.

அமெரிக்க இராணுவத்திடம் பிடிபடும் தலிபான்கள் இராணுவ முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறார்கள்.

இராணுவ முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு ஆப்கானிஸ்தானியர்களை அமெரிக்க இராணுவத்தினர் சித்திரவதை செய்து கொன்று விட்டனர். இது 2002ஆம் ஆண்டு நடந்தது. அமெரிக்க இராணுவ செயற்பாடுகள் பற்றி விசாரணை நடத்தி இரண்டாயிரம் பக்க அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் சித்திரவதை பற்றி விரி வாக கூறப்பட்டுள்ளது.


"எங்கள் நாட்டில் இராணுவக் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது பற்றி வெளியான அமெரிக்க இராணுவ அறிக்கை அதிர்ச்சியைத் தந்தது. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்'' என்று அதிபர் கர்சாய் கூறினார்.

அமெரிக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சித்திரவதை செய்த நபர்களை திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.

ஆப்கானிலுள்ள அனைத்துக் கைதிகளையும் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அமெரிக்க இராணுவ செயற்பாடுகள் அனைத்தும் எங்கள் கட்டுபபாடடின் கீழ் வரவேண்டும்.

ஆப்கான் இராணுவத்தோடு சேர்ந்தே அமெரிகக இராணுவம தேடுதல் வேட்டையை நடதத வேண்டும் எங்கள் அரசை கலந்து பேசாமல் இராணுவ நடவடிக்கை எதையும் எடுக்கக் கூடாது.

ஆப்கான் அரசுக்குத் தெரியாமல் எங்கள் மக்களின் வீடுகளுக்குள் அமெரிக்க இராணுவம் நுழையக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.



உலகெங்கும் கண்காட்சிகளை நடத்தி வரும் ஸ்பெய்ன் விமானப்படையினர் ஸ்பெயினில் கொறுனாவில் நிகழத்தும் சாகாசம்.

## சர்வதேச திரைப்பட விழா டாமிலீசிறந்த நடிகர்

பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் 58 ஆவது சர்வதேச திரைப்பட விழா நடைபெற்று வந்தது. இதன் நிறைவு விழாவில் சிறந்த நடிகர் நடிகைகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. சிறந்த நடிகைக்கான பரிசு இஸ்ரேல் நடிகை ஹன்னாலாங் லோவுக்கு கிடைத்தது. சிறந்த நடிகருக்கான விருது அமெரிக்காவின் டாமிலீஜோன்சுக்கு கிடைத்தது. தி திரீபரியல்ஸ் என்ற படத்தில் நடித்ததற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.



ஸ்பெயின் நடிகை பென்னிசோப் இந்த விருதை டாமிலீயிடம் வழங்கினார் தி சைல்டு என்ற பெல்ஜியப் படம் சிறந்த படத்திற்கான விருதை தட்டிச்சென்றது.

## உஸ்பெகிஸ்தான் கலவரத்திற்கு மதத் தீவிரவாதிகளே காரணம்!

(நியூயோர்க்)

உஸ்பெகிஸ்தானில் கிழககுப் பகுதியில் ஏற்பட்ட வன்முறை குறித்து சாவதேச மனித உரிமைகள் குழு விசாரிகக அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மதத தீவிரவாதிகளே இந்த வன்முறைக்குக் காரணம் என்றும் அது குற்றம் சாட்டியது. உஸ்பெகிஸ்தான்அதிபர் இஸ்லாம் கரி மோவ் வியாழக்கிழமை ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனானுடன் தொலைபேசியில் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை எவ்வேளையிலும் அனுமதிக்க முடியாது

## திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன்

(திருமலை)

தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் எவற்றையும் எந்த வேளையிலும் அனுமதிக்க முடியாதென திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். திருகோணமலையில் இடம் பெற்று வரும் முறுகல் நிலை தொடர்பாக கருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; திருகோணமலையில் உருவாகியுள்ள புத்தர் சிலை விவகாரத்தில் ஜே.வி.பியினர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்தி இன முறுகலை ஏற்படுத்த முனைகின்றனர். எனவே ஜே.வி.பியின் இந்த செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் மக்களின் விடுதலை என்பது எமது போராட்டத்திற்கு ஊடாகவே இருக்கின்றது. எனவே தமிழ் மக்களின் பாதிப்புக்கள் ஒவ்வொன்றையும் நாம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்போம் எனவும் எழிலன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜேர்மன் நிறுவன அதிகாரிகள் த.பு.கழக அதிகாரிகளுடன் பேச்சு

## –வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டனர்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஜேர்மன் நாட்டு நிறுவனங்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அந் நாட்டின் தூதுவராலயத்தைச் சேர்ந்த அதிகாரியான ஜோர்க் ஸ்கீமிட்ற், ஜேர்மன் பொருளாதார கூட்டுறவு அமைச்சின் ஆசியாவிற்கான சிரேஷ்ட அதிகாரி சீய்லர் ஆகியோர் கடந்த வெள்ளியன்று காலை 11.15 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் ஆகியோரைச் சந்தித்தனர். ஜேர்மனி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டபின்னர் நேரடியாகச் சென்று வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர். இதில் தட்டுவன்கொட்டி, முல்லைத்தீவு, விசுவமடு போசாக்கு நிலையங்கள் உட்பட பல இடங்கள் இவர்களால் பார்வையிடப்பட்டன.

# அதிபர், ஒரேயொரு ஆசிரியருடன் செயற்படும் பாடசாலை!

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆறுவரையான வகுப்புக்கள் இருந்தபோதிலும் ஒரு அதிபரும் ஒரு ஆசிரியரும் மட்டுமே இப்பாட சாலையில் கற்பித்தலில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

நீண்ட நாட்களாக ஆசிரியர் பற்றாக்குறையினால் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே இப்பாடசாலையில் இவர்கள் கற்பித்து வருகின்றார்கள்.

150இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் இப்பாடசாலை கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும்.

இப்பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றுமாறு பாடசாலை அதிபர் மன்னார் கல்விவலயப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். (18)

# மீள் குடியமர்வு கிராமங்களில் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் தோட்டவெளி, மூதூர் ஆகிய இரு மீளக்குடியமர்ந்த கிராமங்களில் நேற்று முன்தினம் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்ட நிலையம் இரண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னிப் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பயிற்சி வகுப்பிற்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் 20 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டதுடன் அதற்கெனப் பயிற்சி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையாக மூவாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (18)

# முல்லை.மாவட்டத்தினுடைய வைத்தியர்கள் சேவையாற்ற முன்வந்தால் நெருக்கடிகள் தீரும்

## –மாவட்ட பி.மா.சு.சே.பணிப்பாளர் தெரிவிப்பு

(புதுக்குடியிருப்பு)

**முல்லை.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும் நெருக்கடிகளையும், மக்களுக்கான சேவையையும் சீரான முறையில் செய்ய முடியாததொரு துர்ப்பாக்கிய நிலையில் உள்ளதாக முல்லை. மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா அவர்கள் தெரிவித்தார்.**

முல்லை.மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக அவரை முல்லைத்தீவிலுள்ள அவரது பணிமனையில் சந்தித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும்போது; முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு பதினைந்து வைத்திய அதிகாரிகள் தேவையாகவுள்ளபோது இருவர் மட்டுமேயுள்ளனர். பதிவு வைத்தியர்கள், உதவிவைத்தியர்கள் பதின்மூன்று பேர் தேவையாகவுள்ளபோது பத்துப்பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்கள் நாற்பது பேர் தேவையாகவுள்ளபோது ஒன்பது பேர் மட்டுமேயுள்ளனர். இதேபோல் ஏனைய பதவிநிலைகளுக்கும் வெற்றிடங்கள் நிறையவுள்ளன.

வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புமிக்க மேலதிக சேவையால் தான் வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. சுகயீன காரணமாக ஒரு வைத்தியர் விடுமுறையில் சென்றால் அவ்விடத்திற்கு பதிலுக்கு வைத்தியரை அனுப்ப முடியாத சூழ்நிலையில் உள்ளோம். இவ்விடயமானது மேலும் நெருக்கடிகளைக் கொடுக்கும் விடயமாகும்.

மேலும் நீண்டகாலமாகப் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் மாற்றலாகிச் செல்லமுடியாததொரு துன்ப நிலை எமது மாவட்டத்தில் உள்ளது. ஏனெனில் அவரின் இடத்துக்கு யாரும் வருவதாக இல்லை. எமது மாவட்டத்தின் நிலைகுறித்து உயர் அதிகாரிகளின் கவனத்துக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியுள்ளோன். ஆனால் பயன்ஏதும் இல்லை. இவை எல்லாவற்றுக்கும் ஒரு வழியுண்டு. இம்மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் நிறையப்பேர் வெளிமாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். அவர்கள் குறிப்பிட்ட காலமாவது எமது மாவட்டத்துக்கு வந்து சேவையாற்றினாலே போதுமென அவர் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்களுக்கு அழைப்பு விடுத்தார். (08)

# உடையார்கட்டில் தபால் சேவை பல கிராமங்களை எட்டவில்லை!

## -சேவையைச் சீராக்க மக்கள் வேண்டுகை

(நமது நிருபர்)

உடையார்கட்டுப் பிரதேச மக்கள் தங்களுக்கு வரும் கடிதங்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெருமளவு மக்கள் தொகையைக் கொண்ட இப்பிரதேசத்தில் பல கிராமங்கள் காணப்படுகின்றன. இவை யாவற்றுக்கும் ஒரேயொரு தபால் விநியோகத்தரே கடமையாற்றுகின்றார்.

இதனால் பகுதிபகுதியாகவே கடித விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மக்கள் தமக்குவரும் கடிதங்களை விரைவாகப் பெறுவதில் நெருக்கடிநிலைகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் தமது சொந்த விடயங்களையும் அலுவலக விடயங்களையும் விரைவாக நிறைவு செய்வதில் பலபிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

உலக தொடர்பாடல் அதிகரித்துள்ள இவ்வேளையில் கடித விநியோகம் சீரின்மையாகக் காணப்படுவது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மேலதிக தபால் விநியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.



துணுக்காய்ப் பகுதியிலுள்ள சுகாதாரமற்ற குடிநீர் கிணறொன்றைப் படத்தில் காண்க. இவ்வாறான கிணறுகள் பல அப்பகுதியில் பொதுமக்களின் பாவனையில் உள்ளன. இவற்றால் பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்-அன்ரனி)

# முல்லை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை விரைவில் திறக்கப்படும்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை விரைவில் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கடந்த வருடம் இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தால் முற்றாக அழிந்து போனது தெரிந்ததே.

இதன் பின்னர் நீர்ப் நிறுவனத்தின் உதவியால் மீண்டும் முல்லைத்தீவில் ( முல்லை-முள்ளியவளை வீதியில்) புதிதாக அமைக்கப்பட்டு வரும் இப்பணிமனையின் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து வருவதாகவும் மிகவிரைவில் திறந்து வைக்கப்படும் எனவும் முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி. ஜெயக்குலராசா அவர்கள் தெரிவித்துள்ளார். (08)

## கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி

(பூநகரி)

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளிற்கான தமிழ்மொழித்திறன் போட்டி இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் பூநகரி ம.வியில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை நடைபெறுமென கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (34)

## கிளி-முல்லை மாவட்ட எல்லையிலுள்ள

# விசுவமடு படித்தவாலிபர் திட்ட கிராம அபிவிருத்திக்கு முன்வருக!

மூன்று வருடங்களுக்கு மேலான போர்நிறுத்த காலத்திலும் விசுவமடு படித்த வாலிபர் திட்ட கிராமம் எந்தவொரு அபிவிருத்தித்திட்டங்களும் மேற்கொள்ளப்படாதுள்ளது. பிரதானமாக வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்வீதி வழியாக போக்குவரத்தினை மேற்கொள்வது மிகவும் சிரமமாகவுள்ளது. பருவகால மழை ஆரம்பித்தால் இப்பகுதியின் போக்குவரத்து தடைப்படக்கூடிய அளவிற்கு மிகவும் இவ்வீதி சேதமடைந்துள்ளது. த.போ. க. பேருந்துப்பணி உட்பட்ட பல வாகனப்போக்குவரத்து நிறைந்த இவ்வீதி இவ்வாறு கவனிப்பாரற்று இருப்பது தமக்கு மிகவும் வேதனையளிப்பதாகவும் இது தொடர்பாக சமபந்தப்பட்ட அதிகாரிகளிற்குத் தெரியப்படுத்தி அவர்களும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட எல்லைப்பகுதியாக இருப்பதனால் இது புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# காணாமற்போனோர் விபரங்களை மூடிமறைக்க அரசு நடவடிக்கை!

## –பெற்றோர், உறவினர் சந்தேகம்

(வடமராட்சி)

**யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் நாட்களில் ஸ்தம்பித்துப் போகலாமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.**

இதனால், காணாமல்போன தமது உறவுகள் தொடர்பான உண்மைகள் ஏதும் வெளிவராது அது மூடிமறைக்கப்படுமெனவும் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தரப்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

1996ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து மீளக் குடியமரும் நோக்கில் வருகை தந்த 600இற்கு அதிகமான இளைஞர்- யுவதிகள் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போயிருந்தனர். இவ்விடயம் தொடர்பில் படையினருக்கு எதிராகவும், அரசிற்கு எதிராகவும் சர்வதேச ரீதியில் எழுந்த அழுத்தங்களையடுத்து இலங்கை அரசு உரியவிசாரணைகளை ஆரம்பிப்பதாக அறிவித்திருந்தது. இதையடுத்து சர்வதேச நாடுகள் சிலவும் அதற்கான நிதியை வழங்கியதுடன், அது சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுமெனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், வெறுமனே விசேட பொலிஸ் விசாரணைக் குழுக்கள் மூலம் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக சட்டமா அதிபர் திணைக்களம் நடத்திவருகின்றது. தொடர்ந்தும் இவ்விசாரணைகள் நீடித்துச் செல்லப்படுகின்றபோதும் உரிய தீர்வேதும் இதுவரை கிட்டியிருக்கவில்லை.

இந்நிலையில், காணாமற்போனோரது பாதுகாவலர்கள் தரப்பில் நேரடியாக யாழ். மேல் நீதிமன்றில் தனித்தனியான ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அம்மனுக்களில் சட்டமா அதிபரும் எதிரிகளில் ஒருவராக அறிவிக்கப்பட்டு இவ்வாறு படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரது பாதுகாவலர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மனித உரிமைகளுக்கான சட்டவாதி எம். றெமீடியஸ் ஆஜராகி வருகின்றார்.

இவ்வாறானதொரு நிலையில், சர்வதேச சமூகத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட நிதியுதவிகளை சட்டமா அதிபர் திணைக்களம் முடக்கிக் கொண்ட நிலையில், மற்றோர் தொண்டரமைப்பே இவ் ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைக்குத் தேவையான நிதியுதவிகளைத் தற்போது வழங்கி வருகின்றது. ஆயினும், அந்நிதியுதவி தொடர்ந்தும் கிடைப்பது உறுதிப்படுத்தப்படாதநிலையிலே விசாரணைகள் தொடர்பான சந்தேகம் எழுந்துள்ளது.

இதனிடையே இவ் ஆட்கொணர்வு மனுக்கள் சார்பில் ஆஜராகும் அரச சட்டத்தரணி, இராணுவத் தரப்பு சட்டத் தரணி போன்று செயற்படுவதாக குற்றம்சாட்டப்படுகின்றது. கொழும்பிலிருந்து வருகைதரும் அரச சட்டத்தரணி பாதுகாப்புக் காரணங்களை காரணம் காட்டி பலாலி படை முகாமிலேயே தொடர்ந்து தங்கிநிற்பதாகவும், அங்கிருந்தே நீதிமன்ற விசாரணைகளிற்கு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், நீதியானதும், நடுநிலையானதுமான செயற்பாட்டை எவ்வாறு அவ் அரச சட்டத்தரணியிடம் இருந்து எதிர்பார்க்கலாமென பெற்றோர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது மனித உரிமைகளுக்கான சட்டத் தரணியை புலிகளுக்காக வாதாடுவதாக குறித்த அரச சட்டத் தரணி நீதிமன்றில் தெரிவித்த கருத்துத் தொடர்பாக நீதிபதியால் எச்சரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (27)

## பிரதேச சபைக்கு சொந்தக் கட்டடம்

நீண்டகாலமாக வாடகைக்கட்டடத்தில் இயங்கிவந்த கரவெட்டிப் பிரதேச சபைக்கு இப்பிரதேச மக்களால் சேர்க்கப்பட்ட நிதியிலிருந்து புதிய காணி ஒன்று கொள்வனவுசெய்யப்பட்டு புதிய நிர்வாகக் கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டு வருவதாகவும், நீர்ப்திட்டத்தின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருவதாகவும் அடுத்த மாதமளவில் புதிய கட்டத்தில் கரவெட்டிப்பிரதேசசபைஇயங்கவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (28)

## த.பொ.மே.நிறுவன உதவியுடன் விவசாயிகளுக்குக் கருத்தரங்கு

(தென்மராட்சி)

கல்வயல் விவசாயிகளுக்கு வலுவூட்டல் பயிற்சிக் கருத்தரங்குகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பிற்சிக் கருத்தரங்குகளில் பயிர்வகைகள், வெங்காயச்செய்கை முறை மற்றும் ஊடுபயிர்கள் பயிரிடுதல் சம்பந்தமாக விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதுடன் நோய்களில் இருந்து பாதுகாத்தல் தொடர்பான விளக்கங்களும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கருத்தரங்குகளில் தென்னை அபிவிருத்திச்சபை வடபிராந்திய முகாமையாளர் க.தெய்வேந்திரன், விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர். (28)

## விபரச் சேகரிப்பை நிறுத்தாவிட்டால் எதிராகப் போராட்டம் நடத்தப்படும்

### -வர்த்தகர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர்களின் விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையை சிறிலங்காப் படையினர் இன்று கைவிடாவிட்டால், அதற்கெதிராக போராட்டம் நடாத்தப்போவதாக யாழ் வர்த்தகர் சங்கத் தலைவர் ஜெயராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வர்த்தகர்களுடைய விபரங்களைச் சேகரிக்கும் படையினரது இந்த நடவடிக்கை மீண்டும் போர்மூளும் அபாய எச்சரிக்கை போன்றிருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், போர்க்காலத்தில் இடம்பெற்றது போன்ற இத்தகைய நடவடிக்கைகள், போர்நிறுத்த காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் என்ன என்றும் கேள்வியெழுப்பியுள்ளார். எனவே, படையினர் இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடவேண்டும் எனவும், அல்லது போனால், அதற்கெதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு வர்த்தகர்கள் நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கடையுடைத்து திருடமுயன்ற இருவர் பிடிபட்டனர்

(நல்லூர்)

நள்ளிரவு நேரம் கடையுடைத்து திருட முயன்ற இரு சிறுவர்கள் கடை உரிமையாளரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்கள்.

கடந்த வெள்ளியன்றுஇரவு உரிமையாளர் கடையைப் பூட்டிவிட்டுச் சென்று மீண்டும் தற்செயலாகத் திரும்பி வந்தபோது தனது கடையின் மேல் கூரையில் ஒருவர் இருப்பதைக் கண்டு சத்தமிட்டுள்ளார். கூரையின் மேல் இருந்தவர் அதிலிருந்து பாய்ந்து விட்டார். மற்றவர் கடையினுள் வைத்துப் பிடிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இப்பகுதியில் பல களவுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கூரையில் இருந்து பாய்ந்தவர் கால் முறிந்த நிலையில் கிடந்து தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார். இக்களவு சம்பந்தமான விசாரணையை உடுவில் பிரதேச கலாச்சாரத்தைப்பேணும் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (41)

## சுனாமியால் பாதிப்புற்றோரின் கடற்றொழில் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பவில்லை

### –யாழ்.க.ச.ச.சம்மேளனங்களின் செயலர் கவலை

யாழ்.வடமராட்சியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லையென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்க சமாச சம்மேளனங்களின் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் வடமராட்சி மீனவர்களது கடற்கலன்களும், உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டும், அலையினால் அடித்துச் செல்லப்பட்டுமுள்ளன.இதன்காரணமாக தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க முடியாத நிலையில் இப்பகுதி மீனவர்கள் உள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக சில தொண்டர் அமைப்புக்களால் வழங்கப்பட்ட படகுகள், உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி சில மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள போதும் இதற்குக்கடற்படையினரது "பாஸ்" கெடுபிடி பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது.

இந்நிலைமைகள் காரணமாக வடமராட்சி மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாதநிலையில் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகியிருப்பதாக சூரியகுமார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

## யாழ்ப்பாணம்–பருத்தித்துறை வீதியில் விபத்துக்கள் நாளாந்தம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக இவ்வீதியில் நாளாந்தம் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

யாழ்.கண்டிவீதியிலுள்ள செம்மணிப்பாலத்தின் திருத்தவேலைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதனால்பருத்தித்துறை வீதியூடாகவே தென்மராட்சியூடான சகல வாகனப் போக்கு வரத்துக்களும் இடம் பெறுகின்றன.

அத்துடன் வடமராட்சிப் பகுதிக்கான சகல வாகனப் போக்குவரத்துக்களும் இவ்வீதியூடாகவே இடம் பெறுகின்றன. இந்நிலையில் இவ்வீதியூடான வாகனப்போக்குவரத்து நெருக்கடி மிகவும் அதிகரித்திருப்பதால் இவ்வீதியில் நாளாந்தம் வாகன விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

எனினும் இவ்வீதியில் நிலவும் விபத்துக்களையும், வாகன நெரிசல்களையும் கட்டுப்படுத்த சிறிலங்காப் பொலிசாரின் வீதிக்கண்காணிப்புப் பிரிவினர் தகுந்த நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கொரிய புலமைப்பரிசில் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கொரியநாட்டு உதவியுடன் புலமைப்பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் 2004ஆம் ஆண்டு பயிற்சி நெறிமுடித்து வெளியேறிய மாணவர்களுக்கும். தற்போது பயிற்சி நெறி கற்றுவரும் மாணவர்களுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்டதற்கான புலமைப்பரிசில் உதவித்திட்டம் கொரியநாட்டு உதவியுடன் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.2004ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் பயிற்சிநெறிமுடித்து வெளியேறியமாணவர்களை யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து தரும்படி தொழில் நுட்பக்கல்லூரி நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (சு)

## கடும் வெப்ப காலநிலையால் நோய்கள் பரவும் நிலை!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவுகின்ற கடும் வெப்ப கால நிலை காரணமாக இங்கு வெப்பநோய்கள் மிகவும் தீவிரமாகப் பரவத்தொடங்கியுள்ளன. குறிப்பாக கண்நோய், கூகைக்கட்டு, சின்னமுத்து, கொப்புளிப்பான் மற்றும் வெப்பக் காய்ச்சல் நோய் என்பன தீவிரமாகப்பரவுகின்றன.

இந்நோய்களின் தாக்கம் இடம் பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் தீவகம் தென்மராட்சி போன்ற பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். எனவே இந்நோய்களின் தாக்கங்கள் அதிகமுள்ள பிரதேசத்தவர்கள் பழவகைகளை அதிகம் தமது உணவில் சேர்த்துக்கொள்ளுமாறும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (33)

## பழைய மாணவர் சங்கத்தால் இலவச மின் இணைப்பு

(தென்மராட்சி)

நோர்வேயில் இயங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு இலவசமாக மின் இணைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது இப்பிரதேசத்தின் மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு இச்சங்கம் தமது உதவிகளைத் தொடர்ந்து வழங்க உள்ளதாக அதன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (28)

# கொள்கையற்ற கோமாளிகளின் — அரசியல்!

நாட்டின் அதியுயர் பதவியிலிருக்கும் சந்திரிகா குமாரதுங்க உயிரைப் பணயம் வைத்தாகிலும் விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதாக அண்மையில் கூறியிருக்கிறார். அவரின் சமாதானத்திற்கான யுத்தத்தில் ஒரு கண்ணைத்தானம் கொடுத்தார். சமாதானத்துக்காகவே கணவனை



பறி கொடுத்ததாகவும் கூறப்படுகிறது அவ்வாறாயின் சமாதானத்துக்காக அவரது பதவியை தாரைவார்ப்பதும் பெரியவிடயமல்ல.

ஆனால் ஜே.வி.பியினரும் உயிரைப் பணயம் வைத்தாவது பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதைத் தடுக்கப்போவதாகக் கூறியிருக்கின்றனர். சந்திரிகா பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது நாட்டின் நலன்கருதி என்று கூறும்போது ஜே.வி.பியினரும் நாட்டின் நலன்கருதியே அதனைத் தடுக்கப் போவதாகத் தெரிவிக்கின்றனர். இதில் எது சரியானது? எது சரியோ எது பிழையோ, கூட்டணி அமைத்தது இதற்காகவல்ல. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் ஒப்பந்தம் செய்து கூட்டணி அரசு அமைத்ததரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளிடம் நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு எதிராக செயற்படுவதற்கே. ஆகும்இது அன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தெரிவித்த கருத்துக்களில்இருந்து தெளிவாகிறது. உதாரணங்களுக்காக அவற்றுள் சில.

2003 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் மங்கள சமரவீர கூறியதாவது "விடுதலைப்புலிகளிடம் இடைக்கால சபை நிர்வாகம் நோர்வேயூடாக கையளிக்கப்படவிருக்கின்றது. இது நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தப் போகின்றது" மகிந்த ராஜபக்ஷ, மணிராசங்குளம் முகாம் தொடர்பில் நோர்வே அரசின் செயற்பாடு பற்றி அரசாங்கம் தெரிவிப்பது நகைப்பிற்குரியது அது நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாகிவிட்டது. நோர்வே அரசின் கட்டுப்பாட்டில் எமது நாடு இல்லை. அரசு உடனடியாகச் செயற்பட வேண்டும்"

இவை அன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்களின் புலம்பலாகும். இன்று ஜே.வி.பியினர் புலம்புவது! மக்களிடம் அப்படியும் இப்படியும் வாக்குறுதிகளைக் கூறி இப்போது அரசாங்கம் வேறு வழியில் செல்வதாகக் கூறுகின்றனர். அத்துடன் தமது கட்சி எப்போதும் ஒரே வாக்குறுதியைக் கொண்டிருப்பதாகவும் அதிலிருந்து மாறுவதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் தனது கட்சி (ஜே.வி.பி)யின் 40 ஆவது வருட விழாவில் நாட்டுக்காக தமது உயிரை அர்ப்பணிப்பதிலிருந்து தவறமாட்டோம் என சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

அப்படியானால் 1987 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது அவர்கள்கொண்டிருந்த நிலைப்பாட்டில் இன்று மாற்றம் ஏற்படவில்லையா?

ஜே.வி.பி அன்று செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்திய கூட்டு ஒப்பந்தத்தின் போதும் நாடு இந்தியாவின்மேலும் ஒரு மாநிலமாகப் போவதாகவும் இந்திய இராணுவம் இங்கு வருவது சமாதானத்தை ஏற்படுத்தவல்ல- வடக்குக் கிழக்கைப் பிரித்துத் தனி நாட்டை வழங்கவே வருவதாகவும் புலம்பினர்.

அதன் விளைவாக இந்திய அரசையும் அதன் உற்பத்திப் பொருட்களையும் ஜே.வி.பியினர் வெறுத்ததுடன் இந்திய தயாரிப்புக்களை (புடவை, இயந்திரசாதனங்கள், உணவுவகைகள்)யும் மக்கள் வாங்கவோ கடைகளில் விற்கவோ ஜே.வி.பி.யினர் தடையை விதித்தனர் அத்துடன் இதனை மீறுவோர் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தக் கிளர்ச்சியினால் ஜே.வி.பிக்குக் கிடைத்த பயன் என்ன? 1990 ஆம் ஆண்டு நிதிய மைச்சர் தனது வரவு செலவுத்திட்ட உரையில் நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை வார்த்தையால் கூறமுடியாது எனத் தெரிவித்ததே யாகும் அத்துடன் நாடு பல வருடங்கள் பின்தள்ளப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சியினால் 613 அரச பேருந்துகளும் 16 சாலைகளும் (டிப்போ)16 ரயில் வண்டிகளும், 24 ரயில் நிலையங்களும் 294 கிராம சேவை அலுவலகங்களும் 73 தேயிலைத் தொழிற்சாலைகளும் 07 மாவட்ட செயலகங்கள் (கச்சேரி) மற்றும் பல அரச தனியார் நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. அதே போன்று பல்லாயிரக்கணக்கான உயிர்களும் அழிந்தன. ஜே.வி.பியினரின் தாயகத்துக்காக என்ற கோட்பாடுகள் இவைதானா? ஜே.வி.பியினால் பலியானோர் தொகை மட்டும் 6,577.

இதன் மூலம் ஜே.வி.பி சிறிலங்காவின் அரசியல் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைத்தது. அன்று இந்திய அமைதிகாக்கும் படையை விலக்கவேண்டும் எனக் கோரியதால் மாகாணசபை நிர்வாகம் முற்று முழுதாக ஸ்தம்பிதம் அடைந்தது. மாகாணசபையுடன் முடிவடையும் இனப்பிரச்சினை தனிநாடுவரை சென்றது. விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் அதிகரித்தது. இந்தியாவின் உதவியின்றியே இராணுவ பலத்தைப் பெற்று நாட்டைப் பிரிக்கும் அளவு அவர்கள் முன்னேறினர்.



இவையனைத்தும் தாய் நாட்டுக்காக ஜே.வி.பி தம்மை அர்ப்பணித்ததின் விளைவுகளாகும். ஆனால் இன்று சந்திரிகாவின் தலையில் சுமத்தப்பட்டிருப்பதோ நாடு பிளவுபடாமல் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பாகும். அவர் 1994 இல் பதவியேற்றதுமே பிரபாகரனை உடன்பட வைத்து அவரின் இராணுவ பலத்தை மட்டுப் படுத்தவே எண்ணினார். ஆனால் இதனைத் தடுக்கவே ஜே.வி.பி அன்றிலிருந்து முயன்று வருகிறது.

இந்த எதிர்ப்பினைத் தீவிரப் படுத்தும்வகையில்வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டுக்குள் பிரவேசித்தார். அவர் வந்ததும் பாரிய கூட்டம் ஒன்றை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது தான் சிறிலங்காவை விட்டு தப்பிச் செல்ல இந்தியாவே உதவி செய்ததாக பெருமைப்பட்டுக் கொண்டார். அன்று இந்தியாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைவரும் தேசத்துரோகிகள் என்று கூறியது சோமவன்ச உள்ளிட்ட ஜே.வி.பியினரே. பின்னர் இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாவே தலையிட வேண்டும் என்று கூறுவதும் சோமவன்ச உள்ளிட்ட ஜே.வி.பியினரே. இந்த வகையில் 71 ஆம் ஆண்டிலும் 88-89 ஆம் ஆண்டுகளிலும் கிளர்ச்சிவாதிகளாக இருந்து பாராளுமன்றத்தைக் கொள்ளையர்களின் குகை என்று கூறிய ஜே.வி.பி தற்போது அதே பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்து ஆட்சி நிர்வாகத்தில் பங்கு கொள்கின்றனர்.

நிர்வாகத்தில் பங்குகொள்வதுடன் 2000 ஆம் ஆண்டு சந்திரிகா முன்வைத்த அரசியல்தீர்வு யோசனைகளையும் அதன் பின்னர் ரணிலின் புரிந்துணர்வு யோசனைகளையும் எதிர்த்தனர். அதன் பின்னர் இடைக்கால சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இறுதியாக தற்போது பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். 2002 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு உடன்படிக்கையால் நாடு பிளவுபடுவதாகக் கூக்குரலிட்டதுடன் 2004 இல் சந்திரிகாவுடன் இணைந்து கூட்டணி அமைத்தார்கள். அப்போது இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக இறுதித்தீர்வுடன் பேச்சு நடத்தினால் அதற்கு உடன்படுவதாக ஜே.வி.பியினர் தெரிவித்தனர்.

இந்தக் கூற்று சரியாக 1988 ஆம் ஆண்டு மாகாணசபை மூலம் நாடு பிளவுபடுவதாகக் கூறியதற்குச் சமனாகும். 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையை வானங்கள் எனக்கூறியவர்கள் 2003 ஆம் ஆண்டு இந்தியாவே இனப் பிரச்சினைத் தீர்வுக்குத் தலையிட வேண்டும் என்கிறார்கள்.

இந்தநிலையில் தாமே அரசியலில் எப்போதும் ஒரே கருத்தைத் தெரிவித்து தமது நிலையில் மாறாதவர்களாக இருப்பதாக எவ்வாறு கூறமுடியும். ஜே.வி.பி அவ்வாறு ஒரே கருத்தைக் கொண்டிருப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மேற்கூறப்பட்ட உண்மைகளிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

இதனை விளங்கிக்கொண்ட நிலையிலேயே சந்திரிகா அவர்களுடன் கூட்டணி அமைக்கப் பெரிதும் பின்வாங்கினார். அவர் பின்வாங்குவதைப் புரிந்துகொண்டதும் ஜே.வி.பியினர் எவ்வாறாயினும் சந்திரிகாவைக் கூட்டணி அமைக்க உடன்படும் வகையில் தனது போக்கை நேரத்துக்குநேரம் மாற்றி வந்தனர்.

சந்திரிகா சற்று வித்தியாசமான தொனியில் இவர்களுக்கெதிராக உரைநிகழ்த்தினால் பின்னர் சந்திரிகாவின் வழிக்கு வந்துவிடுவர். இதற்குக் காரணம் கூட்டணியிலிருந்து பிரிந்து விட்டால் தனது கட்சியை மக்கள் நிராகரித்துவிடுவர் என்றும் தமது அரசியல் முற்றுப் பெற்றுவிடும் என்ற அச்சமும் அவர்களிடம் குடிகொண்டிருப்பதாகும்.

அவ்வாறான அச்சமிருந்த போதும் தாங்களே இந்த நாட்டின் பாதுகாப்புக் கர்த்தாக்கள் என்று கூறிக் கொண்டு இரண்டு பிரதான கட்சிகளையும் விமர்சித்தே வந்துள்ளனர். அன்று ரணில் விக்கிரமசிங்க நாட்டைப்பிரித்துக் கொடுக்கப் போவதாக மக்களைத் தூண்டி ரணிலின் அரசைக் கலைத்துவிடச் செய்தனர். அதனால் குறுகிய காலத்தில்நாட்டின் பொருளாதாரம் பின்தங்கிய நிலையில் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டி ஏற்பட்டது. அதன் மூலம் தனது செல்வாக்கை அதிகரித்து பாராளுமன்றத்துக்குத் தெரிவான நிலையில் கூட்டணியரசுக்குள் இருந்தவாறே இனப்பிரச்சினை தொடர்பில் சந்திரிகா எடுக்கும் தீர்மானங்கள் மீது விமர்சனம் செய்கின்றனர். சந்திரிகா இந்நாட்டின் பாரம்பரிய கட்சியைச் சேர்ந்த ஒருவராக இருப்பதால் அவருக்கு எவ்விதத்திலும் மக்கள் ஆதரவு இல்லாமல் போகாது. நாட்டின சமாதானத்தை விரும்புவோர் அவரின் முயற்சிக்குக் குறுக்கே நிற்கமாட்டார்கள். ஜே.வி.பியினரும் அவர்களைச் சார்ந்த பிக்குகளும் அதற்கெதிராகப் போராட்டம் நடத்தினால் சந்திரிகா வேறு வழியின்றி பாராளுமன்றைக் கலைக்கலாம்.

நாடு ஏற்கனவே பொருளாதாரத்தில் பின்னடைவு கண்ட நிலையிலும் சுனாமி பேரனர்த்தத்தால் மேலும் பொருளாதார வளர்ச்சியில் பூச்சிய நிலைக்குட்பட்ட நிலையிலும் மேலும் ஒரு தேர்தல் நடத்தப்படுமானால் அதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பது தெளிவாகும்.

எனவே 1988 ஆம் ஆண்டுகளிலும் தாய்நாட்டைக் காக்கும் ஜே.வி.பியினரின் நடவடிக்கைகளால் பொருளாதாரம் சீரழிந்தது போன்று இப்போதும் ஜே.வி.பியினரின் நடவடிக்கை காரணமாகவே பொருளாதாரம் சீரழிந்தும் கிடைக்க விருக்கும் உதவித்தொகையும் கிடைக்காமல் போகும் நிலை தோன்றியுள்ளது.

எனவே இந்நாட்டில் தாமே மக்களுக்கு நன்மைகளைச் செய்து பாதுகாக்கும் பொறுப்புடன் இருப்பதாக ஜே.வி.பி கூறுவது வியப்பு

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
தமிழில் வடிவேல்

---

# மதுபோதையில் கைகலப்பு; இருவருக்கு அபராதம்

(மல்லாவி)

துணுக்காய் பொதுச்சந்தை பகுதிக்கு முன்பாக அமைந்த மதுபானச்சாலையில் மது அருந்திவிட்டு மது போதையில் சண்டை செய்த இருவருக்கு நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது துணுக்காய் காவல் பணிமனையினரால் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் மல்லாவி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதியாளர் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட இரு குற்றவாளிகளுக்கும் மல்லாவி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் தலா இரண்டாயிரம் ரூபாய் தண்டப்பணம் விழங்குமாறு தீர்ப்பளித்து விடுதலை செய்தார். (24)

# தரவிருத்தி செயலமர்வு

தரவிருத்தி செயலமர்வு (விஞ்ஞானம்- இடைநிலைப்பிரிவு) தொடருறு ஆசிரியர் கல்விச் செயலமர்வுகள் பின்வரும் நேர அட்டவணைப்படி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் காலை 8-30-முதல் மாலை5-30மணிவரை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26,27,3,4, 10,11,17,18 ஆகிய எட்டு நாட்களும் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறுகிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (14)

# புதுக்குடியிருப்பில் அன்னதானம்

(புதுக்குடியிருப்பு)

வரலாற்றுப் புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் வருடாந்த பொங்கல் தினத்தையிட்டு புதுக்குடியிருப்பில் மாபெரும் அன்னதான நிகழ்வு இடம் பெறுகின்றது.

நேற்றுத்தொடக்கம் நாளை வரையும் அன்னதான நிகழ்வு இடம்பெறவுள்ளது. புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் இந்நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றது.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்சவ புதுக்குடியிருப்பு அன்னதான சபையினரே இதனை மேற்கொண்டு வருகின்றனர்.இவ்வன்னதானத்தை புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் முன்வந்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (08)



# தமிழீழ வைப்பகம்



பதினொராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005

# தமிழீழ வைப்பகம்

## 11 ஆவது அகவை நிறைவில்..

வாழ்த்தும்... ஈழநாதம்

---

இன்று புதிய அகவையாம் தமிழீழ வைப்பகத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

## வண்ணமுகில்சோலை டிஜிற்றல் கலர்லாப்

உலகில் முதல்தரமான NORITSU (3101) டிஜிற்றல் பிறின்ரர் மூலம் (பாஸ்,கறுப்பு வெள்ளை புகைப்படங்களை நான்கே நிமிடங்களில் மிகவும் தரம் வாய்ந்த Kodak Royal) பேப்பரில் பெற்றுக்கொள்ளவும்
சிறிய அளவில் இருந்து. 12 X 18 அளவுகளில் உங்கள் புகைப்படங்களைப்பெறவும்
CD,Floppy,போன்காட்(Sim),டிஜிற்றல் கமராசிப், ஆகியவற்றில் இருந்து புகைப்படங்களைப்பெறவும்.
திருமணவாழ்த்துக்கள்,பிறந்தநாள்வாழ்த்துக்கள்,மற்றும் உங்கள் இல்லத்தில் விசேடவைபவங்களுக்கான அட்டைகள்.
உங்கள் புகைப்படங்களை நெக்கற்றிவை பழுதடையாவண்ணம் CDயில் சேமித்து வைக்கவும்.
உங்களில் விளம்பர அட்டைகள்(விசிட்டிங்காட்டுகளை) நாட்காட்டிகள், என்பவற்றைப்பெறவும்.
புதிய தரம் வாய்ந்த அல்பங்கள், DURO காட்பிறேம்கள், லெமினேட்டுகள் செய்து கொள்ளவும்.
உங்கள் பழைய படங்களை புதிதாக்கிக்கொள்ளவும்.

மெட்லிக் பிறின்ரர் மூலம் 75 வருட உத்தரவாதத்துடன் உங்கள் புகைப்படங்களை வழங்கும் ஒரே நிறுவனம்.
பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள வண்ணமுகில் சோலை நிறுவனம்.

விபரங்களுக்கு வண்ணமுகில் சோலை
டிஜிற்றல் கலர் லாப்
பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி. (சி-12076)

---

புதுக்குடியிருப்பிலும் முல்லைத்தீவு நகரிலும் தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம் பதித்த

# பி.வி.ஆர். நகைமாடத்தினர்

இன்று தனது பதினொராவது ஆண்டை நிறைவு செய்யும்

# தமிழீழ வைப்பகம்

## தமிழர் தாயகத்தின்

பொருளாதார வளர்ச்சிக்கான
தனதுபணியை மேலும் தொடர
வாழ்த்துக்கின்றோம்.



# பி.வி.ஆர். நகைமாடம்

நெடுஞ்சாலை,
புதுக்குடியிருப்பு.

நெடுஞ்சாலை,
முல்லைத்தீவு.

(சி-12077)



# தமிழீழ வைப்பகம்

## பதினொராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005







**முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை**

யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12109) யோகபுரம், மல்லாவி.

**குமரகுரு புடைவை அழகுப் பொருள் வாணிபம்**

(சி-12116) யாழ்சாலை, கிளிநொச்சி.

**மலைமகள் பல்பொருள் வாணிபம்**

அங்காடி உட்புறம், கிளிநொச்சி. உரிமையாளர் சு. வரதன் (சி-12110)

**எழிலகம் விற்பனைநிலையம்**

(சி-12115) புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி.

**கலைமதி புடைவையகம்**

இல:42, அங்காடி உட்புறம், கிளிநொச்சி. (சி-12111)

**மாயவன் புடைவை வாணிபம்**


(சி-12114) அங்காடி உட்புறம், கிளிநொச்சி.

**தேவி அழகு மாடம்**

அங்காடி, கிளிநொச்சி. (சி-12112)

**அருள்மதி புடைவையகம்**

(சி-12113) இல:39, அங்காடி உட்புறம், கிளிநொச்சி.



தமிழர் தாயகத்தின் வைப்பகமே!
தமிழரின் காப்பகமே!
உன்பணி தொடர எமது வாழ்த்துக்கள்.

உங்கள் அனைத்துத்
தேவைகளுக்கும்

**R.V. பந்தல் சேவை**

முல்லைச்சாலை,
தருமபுரம்.

T.P:0712-610008

விநாயகர் வீதி,
மயிலிட்டி.

(சி-12117)

# தமிழீழ வைப்பகம்

## பதினொராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005





**மெய்கண்டான் மனைமாடம்**

இல:41, பொதுச்சந்தை உட்புறம்,
கிளிநொச்சி.
(சி.11933)

**மறைக்கோன் புடைவை வாணிபம்**

இல:அங்காடி உட்புறம், கிளிநொச்சி (சி.11938)

**இசைவேங்கை புடைவை வாணிபம்**

இல:67, பொதுச்சந்தை, கிளிநொச்சி. (சி.11934)

**கண்ணம்மா புடைவை வாணிபம்**

(சி.11939) இல:5, அங்காடி, கிளிநொச்சி.

**தீபா புடைவையகம்**

இல:24, அங்காடி, கிளிநொச்சி. (சி.11935)

**பிறைமதி பல்பொருள் வாணிபம்**

இல:38, அங்காடி, கிளிநொச்சி. (சி.11940)

**சோலைநிலா வண்ணச்சோலை**

(சி.11936) இல:27, அங்காடி, கிளிநொச்சி.

**மூத்தபிள்ளையார் பல்பொருள்வாணிபம்**

இல:155, யாழ் சாலை, கிளிநொச்சி,
இல:52 அங்காடி உட்புறம், கிளிநொச்சி.
(சி.11941)

**அல்லி அழகுசாதன வாணிபம்**

இல:09, அங்காடி, கிளிநொச்சி. (சி.11937)

**கற்பகம் இன்சுவையகம்**

யாழ்சாலை, கிளிநொச்சி. (சி.11942)



# முல்லைத்தீவு – வற்றாப்பளை அரு

# வருடாந்த பொங்கல் உற்சவ


நந்திக்கரையினிலே எழுந்தருளியிருக்கும்
கண்ணகித்தாயே! எல்லோரையும் காத்திடம்மா
எல்லா வகையான
புடைவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
**கண்ணகை புடைவை வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12080)

கண்ணகியாளே உன் பாதம் பணிகின்றோம்.
அழகிய தங்க நகைகளை சிறந்த முறையில்
வடிவமைத்துப்பெற்றுக்கொள்ள
**அம்மன் நகைமாடம்**
பரந்தன்சாலை புதுக்குடியிருப்பு.
(சி-12081)

கண்ணகியே! எங்களைக்காத்தருளுமம்மா!
சகல விதமான பிறேம் வகைகளை அழகிய முறையில்
செய்து பெற்றிட நாடுங்கள்!
**அருட்பிள்ளையார்**
**படமாடம் அன் அழகுமாடம்**
**(ஐங்கரன் படமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு. (சி-12082)

நாடிவருவோருக்கு தாயே உன் வரத்தை தந்திடம்மா!
உங்கள் விருப்பத்திற்கேற்ப அன்பளிப்பு
அழகுசாதனப்பொருட்களை பெற்றுக் கொள்ள
**கயல்விழி அழகுச்சோலை**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12083)

கண்ணகியாள் அருள் எல்லோருக்கும் கிடைக்க
பிரார்த்திக்கின்றோம்.
சிறுவர் சிறுமியர்களுக்கான அனைத்து
வகை றெடிமேட் ஆடைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்.
**தேன்மொழி புடைவை வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
உரிமையாளர்: த.அருந்தவராசா
கேவல்வீதி, மயிலிட்டி. (சி-12084)

வற்றாப்பளை கண்ணகி அம்மனின்பாதங்களைப் பணிந்து நிற்கின்றோம்
உழவுஇயந்திர மோட்டார் வாகன உதிரிகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**பெருந்திருமகள்**
**உதிரிப்பாக வாணிபம்**
**(சரஸ்வதி)**
(சி-12085) பரந்தன்சாலை, புதுக்குடியிருப்பு

பொங்கல் விழா நடைபெறும் கண்ணகியாள்
பேரருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.
முல்லைத்தீவு நகரிலும்
புதுக்குடியிருப்பிலும் உங்கள் விருப்பத்திற்கேற்ப
அழகிய தங்க நகைகளைப்பெற்றிட நாடுங்கள்.
**கலையரசி நகைமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
முதன்மைச்சாலை, முல்லைத்தீவு. (சி-12086)

கண்ணகியாள் அருள் எல்லோருக்கும்
கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.
உழவு இயந்திரம் மோட்டார் சைக்கிள் லேடன் வாகன
உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள
**அப்பன் உதிரிகள் வாணிபம்**
நெடுஞ்சாலை. புதுக்குடியிருப்பு. (சி-12087)

பொங்கல் உற்சவ நன்னாளில் கண்ணகியின் இறையருள்
பல்கிப்பெருகட்டும்.
முல்லைத்தீவு நகரில் குளிர்பானங்கள்
சிற்றுண்டி வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்.
**குணம் மென்பருகை வாணிபம்**
அங்காடி முன்பாக, முல்லைத்தீவு.
(சி-12088)


வற்றாப்பளைக்கண்ணகியே!
உமை வணங்குகின்றோம்!
**பொன்னம்பலம் அரிசி ஆலை**
A-9 வீதி, பரந்தன் – கிளிநொச்சி.
(சி-12089)

பொங்கல் உற்சவ நன்னாளில் அனைவருக்கும் அம்மனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்!
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
எல்லா வகையானபுடைவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
**குமரகுரு**
**புடைவை அழகுப் பொருள்**
**வாணிபம்**
யாழ். சாலை, கிளிநொச்சி.
(சி-12090)

வற்றாப்பளைக்கண்ணகி அம்மனின் பாதங்களைப் பணிந்து நிற்கின்றோம்.
உங்களுக்கு தேவையான சகல புடைவைவகைகளுக்கும்
புதுக்குடியிருப்பில் நாடவேண்டிய ஒரே இடம்
**பிள்ளையார்**
**புடைவை மாளிகை**
சந்தி அருகாமை நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12


## பொங்கல் உற்

## அன்னையருள்



இயற்கை வளங்கள் நிறைந்த ஈழத்திரு நாட்டின் வடபால் வீரமும் விளை நிலமும் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் அற்புதமும் அருட்கீர்த்தியும் நிறைந்து வைகாசி மாதம் பொங்கல் திருநாளில் திரைகடலில் நீரள்ளி விளக்கேற்றி வழிபடுகின்ற தொன்மைச் சிறப்பும் வரலாற்று முதன்மையும் கொண்ட வற்றாப்பளை என்னும் புனிதப் பகுதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கண்ணகை அம்மனுக்கு இன்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆரம்பத்தில் ஆலயம் அமைந்துள்ள இடமானது இருபக்கம் நந்திக்கடலும் மற்றிரு பக்கம் காடும், நீரூற்றுக்களும், புல் நிலங்களும் அமைந்ததொரு அமைதியான தனியிடமாகவே இருந்துள்ளது. ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்துக்கப்பாலேயே மக்கள் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன.

வருடாந்தம் நடைபெறும் பொங்கல் நிகழ்ச்சியும், மக்கள் தாம் வைத்த நேர்த்திக்கடன்களை நிறைவேற்றச் செய்வித்த பூசை, மடை,மண்டகப்படி, குளிர்த்தி என்பனவுமே அக்காலத்தில் நடைபெற்ற ஆலய நிகழ்ச்சிகளாகும்.

'கட்டாடுடையார்' என அழைக்கப்பெறும் பூசாரியரே இக்காலத்தில் ஆலயப் பூசைகள் நிருவாகங்கள் எல்லாவற்றுக்கும் பொறுப்பாய் இருந்துள்ளார். பொங்கலுக்குத் தேவையான நெல், தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, பால், நெய் போன்ற எல்லாப் பொருட்களையும் வற்றாப்பளையிலும் முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு போன்ற அயற் கிராமங்களிலும் வாழ்ந்த கமக்காரரிடமிருந்து பெற்றுள்ளார்.

இவ்வழக்கத்தின் அடிப்படையிலேயே, மிக அண்மைக்காலத்தில்கூட ஒரு சில கமக்காரர், பூசாரியிடம் பொங்கல் நெல் ஒப்படைக்கும் முறை இருந்து வந்துள்ளது என அறிய வந்துள்ளது.


இன்றைய பொங்கல் உற்சவ நன்நாளில் தேசமெங்கும் இறையருள் பல்கிப் பெருகட்டும்.
நம்பிக்கை நாணயமிக்க தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
**கதிர்நிலா நகைமாடம்**
அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
நவீன முறையான மெசின்கட் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
வெளி நகைக்கடைக்காரர்களுக்கு நகைகள்
செய்து கொடுக்கப்படும்.
**சிவசக்தி நகைத் தொழிலகம்**
முல்லை சாலை, தண்ணீரூற்று. (சி-12092)

நந்திக்கடலோரத்திலே அமைந்திருக்கும் கண்ணகியே!
எமது நாட்டில் சமாதானம் நிலைத்திருக்க வேண்டுகிறோம்.
தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,
அங்கத்துவ சங்கங்கள்.
**முல்லை மாவட்ட**
**கடற்றொழிலாளர்**
**கூட்டுறவுச்சங்கங்களின்**
**சமாசம் (வ-து)**
**முல்லைத்தீவு)**
(சி-12093)

வற்றாப்பளை கண்ணகி அம்மனின்
திருமணப்பட்டுப்புடைவைகள், சிறு
அனைத்து வகை றெடிமேட் ஆ
இறக்குமதி செய்யப்பட்
அனைத்தையும் ஒரே இடத்தில்
**கோசலா புடை**
(நாகரீக புடைவை உ
தண்ணீரூற்று

# ருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய
# வ சிறப்பிதழ்-23-05-2005



## ற்சவ நன்நாளில்
## ் வேண்டி நிற்போம்!





வைகாசிப்பொங்கல் திங்கள் அன்று உதயத்தின் முன் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தை நோக்கி குறித்தபாதையால் மடைப்பண்டங்களுடன் காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து மாட்டு வண்டில்களில் ஊர்வலமாக வருவர். அம்மன் ஆலய மூலஸ்தான வாயிலில் உவர் நீர்விளக்கை பேரொளி பரப்ப வைத்துவிட்டு அம்மனைக் கும்பத்தில் இருத்தி கச்சு நேர்ந்து மடைபரவிபொங்கல் கிரிகைகள் தொடரும் சிலம்பு கூறல் படிப்பு மறுபுறம் தொடரும். இரவு சுமார் 10மணியளவில் வளந்து நேரல் இடம்பெற்று பொங்கல் அரம்பிக்கும். உடுக்கு, சிலம்பு, பிரம்பு பத்திரிபோன்ற அம்மனின் சின்னங்களும் பூசையில் வைக்கப்படும். செவ்வாய் உதயத்திற்கு முன் பொங்கல் நிகழ்வுகள் யாவும் முற்றுப் பெறும்.

இவ்வருட வைகாசிப் பொங்கல் மிகவும் சிறப்புற நடைபெறசகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இன்று பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெறவுள்ளது. இம்முறை இப்பொங்கல் உற்சவ நிகழ்வில் அதிகளவானோர் பங்கு பற்றுவர் எனவும் அதற்குறிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் ப[illegible]லன சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஓரளவு இயல்பு நிலையில்,ஆலயத்தின் இராஜகோபுர பொம்மைவேலைகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகள் நல்லபடி நிறைவேறவும், எமது நாட்டு, மக்கள் மேன்மையோடும், உரிமைகளோடும் வாழ வும், சாந்தியும் சமாதானமும் நிலவ - அன்னையருள் வேண்டி எமது முயற்சிகளில் நல்லெண்ணமும், நம்பிக்கையும் அன்பர் களின் ஆதரவும் எதிர்பார்க்கப்படுவதாக ஆலயபரிபாலன சபை யினர் அறியத்தருகின்றனர்.

சிறப்பிதழாக்கம்
காரையூரான்


கண்ணகியம்பாளே எல்லோரையும் காத்திடம்மா!
சகல விதமான பிறேம் வகைகள், சோக்கேஸ் பிற்றிங் அன்பளிப்புப் பொருட்கள், கணனி முறையில் படங்கள் பெரிதாக்கி லெமனேற்றிங் செய்து வழங்கப்படும்.
ஒளிர்ச்செல்வம்
படமாடம்
முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.
(சி-12107)

பொங்கல்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்!
கறுப்பு வெள்ளைப்படப்பிடிப்புகளுக்கும் உங்கள் இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கான படப்பிடிப்புகளுக்கும்.
கவிபோட்டோ
அன் வீடியோ
முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.
(சி-12108)

வற்றாப்பளைக்கண்ணகியே! உமை வணங்குகின்றோம்!
சிற்றுண்டி வகைகளுக்கும் குளிரூட்டப்பட்ட சோடா வகைகளுக்கும்
தேன்சோலை
உணவகம்
ஒட்டுசுட்டான்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12105)

கண்ணகையருள் அடியவர்களுக்குக்கிடைக்க வணங்குகிறோம்!
மோட்டார் சைக்கிள் வாட்டப்பம் ஆட்டோ உதிரிப்பாகங்களும் கட்டடப் பொருட்கள் எலக்றிக் பொருட்கள் பெற்றுக்கொள்ள.
வேளாங்கன்னி
உதிரிப்பாக வாணிபம்
முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.
(சி-12106)

வற்றாப்பளைக்கண்ணகியே! உமைப்போற்றி வணங்குகின்றோம்!
தங்க நகைகளை சிறந்த முறையில் வடிவமைத்துப்பெற்றுக்கொள்ள
தணிகைமகள்
நகைத்தொழிலகம்
முதன்மைச்சாலை, தண்ணீரூற்று.
(சி-12103)

பொங்கல் விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
சகல விதமான அழகுசாதனப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.
திருமகள் அழகுச்சோலை
(ஸ்ரீ அபிராமி)
பிரதானசந்தி, புதுக்குடியிருப்பு.
(சி-12104)

நந்திக்கடற்கரை கோயிலாய் கொண்ட கண்ணகை அற்புதம் கோடியே.
பலசரக்குப் பொருட்களின் விற்பனையாளர்
அன்னம்
பல்பொருள் வாணிபம்
சிலாவத்தைச்சந்தி, முல்லைத்தீவு.
உரிமையாளர்: செ.பஞ்சலிங்கம்.
(சி-12101)

நம்தேசமதில் அமைதி நிலவ
அன்னையருள் வேண்டி நிற்கின்றோம்!
தெய்வம் வாணிப
மாளிகை
புதுக்குடியிருப்புச்சந்தி, புதுக்குடியிருப்பு.
(சி-12102)

எல்லோரையும் காத்தருள்வாய் கண்ணகி அம்பாளே!
பலசரக்குப் பொருட்களின் விற்பனையாளர்
முருகன்
களஞ்சியம்
முதன்மைச்சாலை முள்ளியவளை.
(சி-12099)

கண்ணகியே! உமை வணங்குகிறோம்.
சீமெந்து, கட்டடப்பொருள்கள், பெயின்ற் வகைகள், கோழித்தீன் வகைகள் விற்பனையாளர்.
வன்னி கட்டடப்பொருள்
வேதியல் இடுபொருள் வாணிபம்
முதன்மைச்சாலை தண்ணீரூற்று.
(சி-12100)

நந்திக்கடற்கரையில் நாடியிருந்தே தேடியருள் வேண்டிவரும் அடியவர் துன்பங்களை அகற்றிடம்மா.
இளவரசி (விமல்ஸ்)
புடைவை மாளிகை
புதுக்குடியிருப்புச்சந்தி, புதுக்குடியிருப்பு.
(சி-12097)

நந்திக்கடலோர நாயகியே! உன் வரம் வேண்டுகின்றோம்.
குளிரூட்டப்பட்ட சோடா, சிற்றுண்டி வகைகள் மதியஉணவு வகைகள், என்பனவற்றை ஒரே இடத்தில் சுவைத்து மகிழ
பூங்குன்றன் உணவகம்
தண்ணீரூற்று, முள்ளியவளை.
(சி-12098)

ின் பாதங்களைப்பணிந்து நிற்கின்றோம்.
சிறுவர் சிறுமியர்களுக்கான
ஆடைகள் சல்வார் சோளிகிற்
வகைகள் அன்பளிப்புப் பொருட்கள்
ல் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்.
டவை மாளிகை
லகின் முன்னோடிகள்)
று, முள்ளியவளை.
(சி-12094)

ஏத்தரிய சைவநெறி எங்கும் பரந்தே கண்ணகித்தாயார் கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.
முல்லைத்தீவு நகரில் பலசரக்குப் பொருட்கள் விற்பனையில் முன்னணி நிறுவனம்.
அறிவு வைரவர்
பல்பொருள் வாணிபம்
(சி-12095) முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.

பொங்கல் உற்சவ நன்னாளில்
அன்னையருள் வேண்டுகின்றோம்.
அசல் 22கரட் தங்க நகைகளை கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால்மனதைக் கவர்ந்த டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
இன்பழகி
நகைமாடம்
பிரதான வீதி, முல்லைத்தீவு.
பிரதான வீதி, முள்ளியவளை.
(சி-12096)



# தமிழீழ வைப்பகம்



பதினோராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005

தமிழர் தாயகத்தில் தன்னிறைவு பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிக்கும் தமிழரின் காப்பகமாம் தமிழீழ வைப்பகத்திற்கு எமது வாழ்த்துக்கள்!



**அண்ணா**
**இரும்பு வாணிபம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12067)

**குருகுலன்**
**பல்பொருள் வாணிபம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12075)

**தமிழ்க்கங்கை**
**வண்ணச்சோலை**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12068)

**கலைமகள் அழகு மாடம்**
**கலைமகள் பாதணியகம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12074)

**பிள்ளையார் அருள்**
**வண்ணச்சோலை**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12069)

**சிவனருள் செல்வன்**
**அரிசி ஆலை**
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (சி-12073)

**செந்தமிழ் காலணி**
**அழகுபொருள் வாணிபம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12070)

**வெள்ளையம்மா**
**புடைவை வாணிபம்**
இல:-84, பொதுச்சந்தை உட்புறம், கிளிநொச்சி. (சி-12072)

## முல்லை பல்பொருள் வாணிபம்

இல18 அங்காடி உட்புறம், கிளிநொச்சி (சி-12071)

# தமிழீழ வைப்பகம்

## பதினொராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005

பதினொராவது ஆண்டு சேவையினை
நிறைவு செய்து
இன்று புதிய அகவையில்
பாதம் பதிக்கும்
தமிழீழ வைப்பகமே!
உன் பணி தொடர
வாழ்த்துகின்றோம்.

திருமால் ஒளிப்பட புகைப்பட கலையகம்
(விஷ்ணு வீடியோ அன் போட்டோ)
விசுவமடுச்சந்தி

திருவருட் பிள்ளையார் அழகுச்சோலை
(லிங்கவிநாயகர்)
விசுவமடுச்சந்தி.

செல்வநாயகம் பல்பொருள் வாணிபம்
பொது அங்காடி உட்புறம் விசுவமடு.

பொன்மொழி பல்பொருள் வாணிபம்
விசுவமடுச்சந்தி

கண்ணகி எரிபொருள் வாணிபம்
(சங்கர்)
விசுவமடுச்சந்தி.

பழமுதிர்ச்சோலை பல்பொருள் வாணிபம்
12 ஆம் கட்டை விசுவமடு.

பொன் சிவா பல்பொருள் வாணிபம்
(விவசாய இரசாயனம்)
விசுவமடுச்சந்தி

முத்தம்மா பல்பொருள் வாணிபம்
அன் உதிரிப்பாக வாணிபம்
புளியடிச்சந்தி.

நல்லரசி அரைக்கும் ஆலை
(சுதாமில்)
புளியடிச்சந்தி–விசுவமடு

இறை அம்மன் புடைவை வாணிபம்
(ஈஸ்வர அம்பாள்)
விசுவமடுச்சந்தி

நந்தன் எரிபொருள் வாணிபம்
புளியடிச்சந்தி

நயினை அம்மன் அரிசி ஆலை
விசுவமடுச்சந்தி

ஒளி அழகு பல்பொருள் வாணிபம்
அங்காடி உட்புறம் விசுவமடு.

வாணி உணவகம்
விசுவமடுச்சந்தி.

வாணி மின்ஏற்று நிலையம்
அன் இலத்திரனியல் விற்பனையகம்
விசுவமடுச்சந்தி.

பண்டிதன் மருந்தகம் அன் படமாடம்
அங்காடி உட்புறம் விசுவமடு.

சேந்தன் சுவையகம் (குளிர்களி விற்பனையகம்)
விசுவமடுச்சந்தி.

செல்வம் மரக்கறி வாணிபம்
பொது அங்காடி விசுவமடு.

எழில்ஒளி புடைவையகம்
(எம்.ஆர்)
அங்காடி உட்புறம் விசுவமடு.

இன்னமுதன் வெதுப்பகம்
(ஸ்ரீபன்)
விசுவமடுச்சந்தி.

அன்னக்குமரன் பல்பொருள் வாணிபம்
புளியடிச்சந்தி விசுவமடு.

சின்னக்குமரன் பல்பொருள் வாணிபம்
அங்காடி உட்புறம் விசுவமடு.

செல்வஒளி களஞ்சியம்
விசுவமடுச்சந்தி.

சின்னக்கண்ணன் பல்பொருள் வாணிபம்
அன் உதிரிப்பாக வாணிபம்
விசுவமடுச்சந்தி.

பூம்பாவை அழகுமாடம் (உதயா அழகுச்சோலை)
அங்காடி உட்புறம் விசுவமடு.

மாணிக்கன் புடைவையகம்
(கே.எஸ்.கே)
விசுவமடுச்சந்தி.

செல்லக்கண்ணன் உணவகம்
விசுவமடுச்சந்தி.

நதியா மணிக்கூடு திருத்தகம்
(கடிகார விற்பனையகம்)
விசுவமடுச்சந்தி.

# விசுவமடு வர்த்தக சங்கமும்

# அதன் அங்கத்துவ வணிக நிலையங்களும்

(சி-12078)

# தமிழீழ வைப்பகம்

## பதினொராம் அகவை நிறைவுச் சிறப்பிதழ்-23.05.2005


பதினொராவது அகவை நிறைவை பூர்த்தி செய்யும் தமிழீழ வைப்பகத்திற்கு புதுக்குடியிருப்பு தேவி கட்டடப்பொருள் வாணிபத்தினர் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றனர்.

# தேவி கட்டடப்பொருள் வாணிபம்

## பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு




எஸ்லோன் பி.வி.சி குழாய்கள்,
எஸ்லோன் தண்ணீர் தாங்கிகள்,
சீமெந்து வகைகள்,
தண்ணீர் வாளிகள்,
பெயின்ட் வகைகள்,
கம்பி வகைகள், இரும்புக்கேடர் வகைகள்,
யானைமார்க் கூரைத்தகடுகள்,
கூரைத்தகரங்கள்,
நிலப்பூச்சுக்காவி வகைகள்,
சகல வகையான பூட்டுவகைகள்
மின்சாரப்பொருட்கள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.








# தேவி கட்டடப்பொருள் உதிரிகள் வாணிபம்

## ஒட்டுசுட்டான் சாலை, புதுக்குடியிருப்பு





(சி-12079)

**12.**

* ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஒரு சந்தையில் தீவிரவாதிகள் குண்டு வீசித்தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள் உட்பட 21 பேர் பலி.



**13.** * உஸ்பெகிஸ்தானில் கலவரக்காரர் களை அடக்க இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் 500 பேர் பலி;பலர் படுகாயம்.



* சீனாவின் வடமாகாணமான ஷான்ஷியின் ஹெஷசனா நகரில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட திடீர் விபத்தில் 14 பேர் பலி.

**14.**

* இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவின் சில பகுதிகளில் சக்திவாய்ந்த நில அதிர்வு ஒன்று தாக்கியது. இது ரிக்டர் அளவு கோலில் 6.9 புள்ளியாகப் பதிவானது.

**15.**

* அமெரிக்க வெளியுறவுத் துறையமைச்சர் கொண்டலீசாரைஸ் ஈராக்கிற்கு விஜயம்.



* நேபாளத்தின் மேற்குப் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 600 பாடசாலை மாணவர்களை இராணுவம் மீட்டது.

* தெற்காசிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தின் அருகில் ஆரம்பமானது.

* ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

**16.**



* ஆப்கானிஸ்தானில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த இத்தாலிய நாட்டுத் தொண்டர் நிறுவனப் பெண் ஊழியர் கிளிமென்ரீனா கென்ரனி என்பவர் இனந்தெரியாதோரால் காபூலில் கடத்தப்பட்டார்.

* குவைத்தில் முதல் தடவையாக பெண்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.




* வடகொரிய தென்கொரிய பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம.

* இந்தியபுதியதலைமைத்தேர்தல் ஆணையாளராக பி.பி.தாண்டன்பதவியேற்பு





* காஞ்சிபுரம் கும்மிடிபூண்டி இடைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி.

* சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட ஈராக்கியரின் 46 சடலங்கள் பாக்தாத்திலும் ரமாடி நகரிலும் மீட்கப்பட்டன.

* இந்தோனேஷியாவின் மெலுக்காஸ் தீவில் காவலரண் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஐந்து பொலிசார் பலி.

* நேபாளத்தின் ஜராய்டர் சிந்துலி என்ற இடத்தில் இராணுவத்தினருக்கும் மாவோதீவிரவாதிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இரண்டு இராணுவத்தினரும் 50 தீவிரவாதிகளும் பலியானதுடன் நூற்றுக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் காயம்.



* பிரான்சில் தேசிய விடுதலைமுறையை அரசு இரத்துச் செய்ததால் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

**17.**

* பிரிட்டனில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சிமூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடித்ததையடுத்து இரண்டாம் எலிசபெத் சம்பிரதாயப்படி பாராளுமன்றக் கூட்டத்தை தொடக்கிவைத்தார்.



* ஐக்கியமுற்போக்குக் கூட்டணி அரசின் முதலாம் ஆண்டு நிறைவு விழா புதுடில்லியில் இடம்பெற்றது.

* இந்திய மத்திய பிரதேசத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பொலிசார் காயம்.

* கியூபாவின் பயணிகள் விமானக் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய லூயிஸ் பொசாபா கரிலெஸினை கைது செய்து வெனிசுவேலாவுக்கு நாடுகடத்த வேண்டுமெனக்கோரி கியூபாவில் சனாதிபதி பிடல்கஸ்ட்ரோ தலைமையில் மாபெரும் பேரணி இடம்பெற்றது.

**18.**

* பங்களாதேஷில் எதிர்க்கட்சியினர் தமது அவாமி லீக்கின் செயலாளர் கோசின் அலாம் கொல்லப்பட்டதற்கு எதிராக வேலை நிறுத்தம் மேற்கொண்டனர்.

* ஈராக் உள்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி இப்ராஹிம்கமாஸ் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

* ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள பெண் தொலைக்காட்சி அறிவிப்பாளர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

* தென்பாகிஸ்தானில் ஐதராபாத் என்னும் சிறு நகரில் ஆறு ஆதிக்குடிவாசிகள் துப்பாக்கி தாரிகளால் சுட்டுக் கொலை.

# தமிழ் மக்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு விடுதலைப்புலிகளின் இராணுவ பலம் அவசியம்

**-கூட்டமைப்பு பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன்**

கடந்த காலங்களைப் போன்று தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப் படாமல் இருப்பதற்கு விடுதலைப் புலிகளின் இராணுவப்பலம் பேணப் படுவது அவசியமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தையின் இன்றைய நிலை குறித்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இராணுவ அமைப்பாக இருக்கும் விடுதலைப் புலிகளை அரசியல் அமைப்பாக மாற்றுவதற்கு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக நிலவி வரும் சமாதான சூழ்நிலைகளைக் குழப்பும் நோக்கில் சில சக்திகள் விசமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ் மக்களது ஆயுதப் போராட்டமானது, அரச பயங்கரவாதத்திற்கெதிராகவே ஆரம்பிக்கப்பட்டது. 1950களில் 60களில், 70களில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் 1983இல் பாரிய இனப்படுகொலையாக மாறியது. இந்தப் படுகொலைக்கு அரசின் ஆதரவும் இருந்தது. தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற ஆரம்பத்தில் அகிம்சை வழியிலேயே போராடினர். நேர்மையாக தமது உரிமைகளைப் பெறுவதற்காக அகிம்சை முறையில் போராடியவர்கள் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப்பேச்சு வார்த்தைகளை குழப்ப விரும்புகின்றவர்கள் விடுதலைப் புலிகளை நம்பமுடியாது என்கின்றனர். விடுதலைப்புலிகள் இச் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி தமது இலக்கை அடைந்து விடுவார்கள் எனக் குற்றம் சுமத்துகின்றனர்.

1950ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்தபோதும் இதே குற்றச்சாட்டையே இவர்கள் முன்வைத்திருந்தனர். சமஷ்டி என்பது தனிநாட்டிற்கான முதற்படி எனக்கூறி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது அமுலிலுள்ள யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதில் புலிகள் தொடர்ந்தும் உறுதியாக வுள்ளனர். அவர்கள் இந்தயுத்தநிறுத்தத்திலிருந்து விலக பலசந்தர்ப்பங்கள் இருந்தன. முன்னைய அரசாங்கத்திடமிருந்து மூன்று அமைச்சுக்களை சனாதிபதி பறித்துக் கொண்ட போதும், அவர்கள் பொறுமை காத்திருந்தார்கள். தென்னிலங்கையில் நிலவும் அரசியல் இழுபறி முடியும் வரை தாம் காத்திருப்பதாக அறிவித்திருந்தனர். பின்னர் தேர்தல் ஏற்பட்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர்கூட தாம் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத்தயாரென அறிவித்தனர். தற்போது அமுலிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் நன்மைகளை அரசாங்கம் மட்டும்தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைப்பலவீனப்படுத்த முடியாது என்பதுதான் யதார்த்தம். இதனால் தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முன்னைய அரசு கைச்சாத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடையுமேயானால் மீளமுடியாத சேதங்கள் ஏற்படும். இப்புரிந்துணர்வு உடன்பாடு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதை விரும்பாத தீய சக்திகள் விசமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டுவருகின்றன. சில ஊடகங்களும் ஒற்றை ஆட்சிமுறையின் கீழேயே தீர்வு காணப்பட வேண்டுமென பிரச்சாரம் செய்து வருகின்றன.

ஆனால் கடந்த கால வரலாற்றில் இருந்து நாம் ஒன்றைக்கற்றுக் கொள்ள வேண்டும். புலிகளை உள்ளடக்காத எந்தவொரு அரசியல் தீர்வும் உருப்படியாகாது. வெற்றியளிக்காது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## ஜயலத்திற்கு கொலை அச்சுறுத்தல் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டுகை

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன தமக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொலிசாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நேரில் சென்ற அவர், குற்றத்தடுப்புப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி, தொடங்கொடபலையாய என்ற இடத்திலிருந்து தமக்கு கொலை அச்சுறுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாக இதன்போது குறிப்பிட்டிருக்கும் ஜயலத் ஜயவர்த்தன, இவ்வாறு தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதால் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மாஅதிபரிடம் கோரிக்கை விடுத்தார். சுமார் ஒரு மணிநேரம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பிரதிப்பொலிஸ்மா அதிபரிடம் தம்முடைய நிலையை தான் விளக்கியிருப்பதாகவும், சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது, கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு சில மாதங்களுக்கு முன்னர் சனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின்பேரில் குறைக்கப்பட்டிருந்தமையும்,

இதற்கெதிராக அவர் சர்வதேச மனித உரிமைகள் சபை உள்ளிட்ட பல அமைப்புக்களிடம் முறைப்பாடு செய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மின்சார சபையை மறுசீரமைக்காவிட்டால் கிராமப்புற இளைஞர்கள் பாதிக்கப்படுவர்

*-ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை*

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்காவிட்டால் கிராமப்புற இளைஞர்கள் பாதிக்கப்படுவார்களென ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது. இலங்கை மின்சாரசபை உற்பத்திக்கு ஏற்படும் செலவையும்விட குறைவான விலையிலேயே மின்சாரத்தை விநியோகித்துவருவதாகவும், இதற்கு உதவி வழங்கும் மக்கள் வங்கிக்குத்தான் நன்றி செலுத்த வேண்டுமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கை மின்சார சபையை மறுசீரமைத்து சிறிய மற்றும் நடுத்தர அளவில் கைத்தொழில்களை ஊக்குவிக்க முடியுமெனத் தெரிவித்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அலக்ஸ்சாண்டர் பியோ, எனினும், இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் கிராமப்புற இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்களெனக் கூறியுள்ளார்.

# கல்வியமைச்சு ஆலோசனைச் சபை செயற்குழு சனாதிபதி வசம்!

(கொழும்பு)

கல்வி அமைச்சின் ஆலோசனை செயற்குழு தலைமைப் பதவியை சனாதிபதி பொறுப்பேற்றுள்ளார் என பாராளுமன்ற சபாநாயகர் லொக்குபண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

13 மாதங்களாக கல்வி அமைச்சின் ஆலோசனை சபை செயற்குழு செயற்படாததால் இப்பதவியைத் தான் பொறுப்பேற்றுள்ளதாகவும், மேலும் செயற்திட்டங்களுக்கு அனுசரணை வழங்குமாறு கல்விஅமைச்சின்ஆலோசனை சபையிடம் சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.




கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மேற்படிபோட்டிகளில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் தமிழீழ விளையாட்டுத்துறையில் பதிவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக்கழகங்களில் இருந்து கோரப்படுகின்றன.

- விண்ணப்ப முடிவு திகதி 31.05.2005 பி.ப.5மணி
- போட்டி ஒன்றிற்கான கட்டணம் 500ரூபா மட்டும்
- விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

தலைவர்/ செயலாளர்
கனகபுரம் விளையாட்டுக்கழகம்,
இல-16, கனகபுரம், கிளிநொச்சி

குறிப்பு:-

☐ போட்டிகள்யாவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் ஒழுங்கமைப்பிலும், விதிகளுக்கு அமைவாகவும் நடைபெறும்.
☐ ஒருகழகத்தில் இருந்து ஒரு அணிமட்டும் பங்கு பற்றலாம்
☐ போட்டிகள் யாவும் விலகல்முறை கொண்டதாகும்
☐ மென்பந்து துடுப்பாட்டம் 15 பந்து பரிமாற்றம் கொண்டதாக அமையும்
☐ போட்டி அட்டவணை ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்
☐ விண்ணப்பத்துடன் போட்டியில் பங்கு பற்றும் வீரர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை/போக்குவரத்து பயண அட்டை/தற்காலிக அடையாள அட்டைஇலக்கம், வீரர்களின் கையொப்பம் என்பன முழுமையாக பதியப்பட்டு ஒப்படைத்தல் வேண்டும். இப்பட்டியல் கிளி/மாவட்டவிளையாட்டுத்துறைப் பொறுப்பாளரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(1) உதைபந்து 20 ,(2) மென்பந்து துடுப்பாட்டம் 20 ,(3) வலைப்பந்து 15 வீரர்கள்.

போட்டி அனுசரணையாளர்:- சத்தியதர்ஷன் பூஜிதா குடும்பம்

தகவல்:-
தலைவர்/செயலாளர்,
கனகபுரம் விளையாட்டுக்கழகம்,

☐ கனகபுரம் விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுக்கும் நலன்விரும்பிகளுக்குமான விசேட பொதுக்கூட்டம் 29.05.2005 பி.ப 4.00மணிக்கு நடைபெறும் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

(5926)

# சோமவன்ச தலைமையிலான குழு ஜப்பானுக்குப் பயணம்

(கொழும்பு)

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையிலான குழுவினர் ஜப்பானுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை ஜப்பான்நோக்கிப் பயணமான இந்தக் குழுவில், தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடன், கட்சியின் பிரச்சாரச்செயலரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி.

ஜே.வி.பி. உறுப்பினர்களை ஜப்பானுக்கு வந்து அங்குள்ள அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பார்வையிடுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பின் பிரகாரம் தற்போது ஜப்பான் சென்றிருக்கும் ஜே.வி.பி குழுவினர், ஒருவாரகாலம் அங்கு தங்கியிருந்து அங்குள்ள பல விடயங்களையும் அவதானிக்க விருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# இருவர் பலி

(கொழும்பு)

அவிசாவளை கேகாலை பிரதான வீதிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிர் இழந்துள்ளார்கள்.

இச்சம்பவம் கடந்தவியாழக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. உந்துருளியும், பாரவூர்தியும் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. உந்துருளியில் சென்ற இருவருமே இறந்துள்ளனர். இதனையடுத்து பாரவூர்தி சாரதியும், உதவியாளரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

# அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக்கிளை 2005 .05.23 ஆம் நாள் தொடக்கம் தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேலாண்மைப்பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்.

(சி-11974)



## முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியில்

## ஓவியர் புகழேந்தியின்

# 'புயலின் நிறங்கள்'

## ஓவியக்கண்காட்சியும் கருத்துப்பகிர்வும்

காலமும், இடமும் - 31.05.2005 காலை 10.00 மணி முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி

01.06.2005 காலை 10.00 மணி புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி

குறிப்பு- மாலை 4.00 மணியளவில் இரு இடங்களிலும் நடைபெறவுள்ள இளம் ஓவியர்களுக்கான கருத்துப்பகிர்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து இளைய ஓவியக்கலைஞர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லைமாவட்ட நுண்கலைக்கல்லூரியினர்

(சி-11981)

# நியாப்- II முல்லைத்தீவு மாவட்டம்

கீழ்வரும் அட்டவணைப்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட மையக்கிராமங்களில் கிராமத்திற்கான பங்கேற்பு கிராமிய கணிப்பீடு (PRA), பங்கேற்பு தேவைகள் மதிப்பீடு (PNA) கூட்டங்கள் நடைபெறவுள்ளதால் தயவு செய்து இம் மையக்கிராமங்களின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல கிராமிய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் காலை 9.00 மணிக்கு அந்தந்த மையக்கிராமங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். அரச உத்தியோகத்தர்களில் சமுதாய உதவிக்குழுவில் (CST/TST) நியமனம் பெற்ற அனைவரையும் இத்தினங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| இல. | மையக்கிராமம் | திகதி |
|---|---|---|
| 01 | இளங்கோபுரம் | 25.05.2005 |
| 02 | இரணைப்பாலை | 26.05.2005 |
| 03 | மந்துவில் | 27.05.2005 |
| 04 | ஆறுமுகத்தாகுளம் | 28.05.2005 |
| 05 | முறிப்பு | 30.05.2005 |
| 06 | புதரிகுடா | 31.05.2005 |
| 07 | முள்ளியவளை கிழக்கு | 01.06.2005 |

எந்திரி ச.சு.சிவகுமார்,
பிரதித் திட்டப் பணிப்பாளர்,
நியாப்-முல்லைத்தீவு

(சி-11960)

# கன்னியாகுமரி, கேரளப்பகுதிகளில் பேரலை ஊருக்குள் புகுந்தது

## -நூற்றுக்கணக்கான வீடுகள் அள்ளுண்டு போயின

கடந்த வெள்ளியன்று தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கேரளாவிலும் கடல்



கன்னியாகுமரியில் பேரலை தாக்கியபோது

ஆர்ப்பரித்ததில் கடலோரக்கிராமங்கள் பல நீரில் மூழ்கின. கடல் கொந்தளிப்பால் தமிழகத்தில் பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் தண்ணீர் உள்ளே நுழைந்ததில் எழுநூறிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கேரளாவில் ஐந்நூறிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கேரளா கடற்கரை முழுவதும் நேற்றுவரை பதற்றமான சூழ்நிலையாக இருந்தது.

கடந்த டிசம்பர் 26 சுனாமிக்குப் பின்னர் குமரி மாவட்டத்தில் அடிக்கடிகடல் கொந்தளிப்பு ஏற்பட்டுவருகிறது. கடந்த 17ஆம் திகதி இரவு மாவட்ட எல்லையான இரையுமன் துறையில் ஏற்பட்ட கொந்தளிப்பில் முப்பது வீடுகள் சேதமடைந்தன. கடந்த வெள்ளியன்று அதிகாலை 5.00 மணிக்கு மீண்டும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இருநூற்றி ஐம்பது மீற்றர் தூரம் வரை தண்ணீர் வந்ததால் கடற்கரையில் இருந்த அனைத்து வீடுகளிலும் தண்ணீர் புகுந்தது. காலையில் இந்த அலைகளின் வேகம் மேலும் அதிகரித்ததால் மக்கள் சுனாமியோ எனப் பீதியடைந்தனர்.

இந்தத் தொடர் கொந்தளிப்பால்



பயப்பீதியில் வீதிக்குவந்துள்ள மக்கள்

எழுநூறுக்கும் மேற்பட்ட மீனவர்களின் வீடுகள் சேதமடைந்தன. நூற்றுக்குமேற்பட்ட படகுகள் சேதமடைந்தன, ஏழுபேர் காயமடைந்தனர் எனத் தெரியவருகின்றது.

கேரளாவிலும் கடலோரப்பகுதிகளில் இதேபோன்ற பாதிப்புக்கள் ஏற்பட்டன. தெற்குக் கேரளாவில் கடலோரப்பகுதிகளில் நேற்றுமுன் தினம் காலை 9.30 மணியளவில் திடீரென ராட்சஷ அலைகள் எழுந்தன. பூவார் பகுதியில் கடலோரக்கிராமங்களுக்குள் கடல் நீர் நுழைந்தது. இதில் நூறுக்கும் மேற்பட்ட வீடுகள், நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக ஆட்கள் யாவருக்கும் காயம் ஏற்படவில்லை. பொழியூர்ப் பகுதியில் நூற்றிஐம்பது மீற்றர் தூரத்திற்குக் கடல்நீர் உள்ளே நுழைந்தது.

## கடும் வரட்சி ஐவர் பலி

ஆந்திராமாநிலம் சித்தூர் பகுதியில் வெயில் கொடுமைக்கு கடந்த வியாழன் ஒரே நாளில் மட்டும் ஐந்துபேர் பலியாகியுள்ளனர். வரதய்யாபாளயம் மண்டலம் சின்னபாட்டுரு கிராமத்தைச் சேர்ந்த பலராமையா (வயது 55) மதியம் வெயில் கொடுமை தாங்க முடியாமல் சுருண்டு விழுந்து பரிதாபமாக இறந்தார்.

பெனுமூர் மண்டலம் கொடுகு மானுபல்லி தத்திவாடா வைச் சேர்ந்த சுப்பையா (வயது 65) இவர் அப்பகுதியில் நடைபெற்ற வரட்சி பணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு இரவு வீடு திரும்பியுள்ளார். வெயிலால் உடல் நலம் பாதிக்கப்பட்ட அவர் மறுநாள் காலை மருத்துவரிடம்செல்ல புறப்பட்ட போது இறந்தார். இவ்வாறு அன்றையதினம் ஐவர் கடும் வெப்பத்தால் இறந்துள்ளனர்.

## புதிய உறுப்பினர்கள் பதவியேற்றனர்

இடைத்தேர்தலில் வென்ற இரண்டு அ.தி.மு.க உறுப்பினர்களும் பதவியேற்றனர். காஞ்சிபுரம் கும்மிடிப் பூண்டி ஆகிய இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க.வேட்பாளர்கள் மைதிலி திருநாவுக்கரசு, கே.எஸ்.விஜயகுமார் ஆகியோர் நேற்று முன்தினம் பகல் பன்னிரண்டு மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து சபாநாயகர் காளி முத்து அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதையடுத்து உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி சபாநாயகர் அறையில் நடந்தது.

## இந்திய தேசிய பெண்கள் ஆணையக உறுப்பினர்கள் மாற்றப்பட்டனர்

தேசிய பெண்கள் ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. பா.ஜனதா தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி அரசில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட நபிசா ஹுசைன், நிர்மலா சீதாராமன், அனுசியா, உய்கி ஆகியோர் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செயற்குழு உறுப்பினர் மோசத்தம்மா, ராஜ்யசபை, முன்னாள் உறுப்பினர் சுசில்திரியா, மகளிர் காங்கிரஸ் துணைத்தலைவி நீவாகொன்வர், ராஜஸ்தான், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான யாஸ்மின் அப்ரார், இ.கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்த மாலினி, பட்டாச்சாரியா ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



மக்களிடம்குறை கேட்கும் ராகுல்காந்தி

## ஜோர்ஜ் பெர்னாண்டஸை சீண்டுகிறார் சரத்யாதவ்

அமெரிக்காவில் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் ஆடையைக் கழற்றி சோதனை போட்டதற்கு அவர் தான் காரணம் என்று சரத் யாதவ் சாடியுள்ளார்.

அவர் குறிப்பிட்டதாவது குஜராத் முதல்வர் நரேந்திரமோடிக்கு லண்டன் மற்றும் அமெரிக்காவுக்குச் செல்ல அனுமதி விசா மறுக்கப்பட்டது. அவருக்கு மட்டுமல்ல இப்படிப்பலர் அவமதிக்கப்பட்டனர். அவர்களில பலர் வெளியே சொல்லாமல் இருந்து விட்டனர்.

மேலும் அமெரிக்கவிமான நிலையத்தில் ஆடைகளைக் கழட்டி சோதனை போடவும் சிலர் சம்மதித்துள்ளனர். அதுபற்றி வெட்கம் கெட்டவர்களுக்கு கவலையில்லை. இதுவரை நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் மோகத்தைக் கைவிடவேண்டும். பட்டது போதும் என்று இருக்கவேண்டும். மகாத்மா காந்தி, சீனத்தலைவர் மா.செ.துங் ஆகியோர் வெளிநாடு செல்லும் மோகத்தைக் கைவிட்டனர் என்றார்.

## பிரதமரின் மாநாட்டைப் புறக்கணித்தனர் தமிழக மாவட்ட ஆளுநர்கள்

இந்தியா முழுவதும் உள்ள மாவட்ட ஆளுநர்கள் ஆலோசனைக்கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் டில்லியில் கடந்த வெள்ளி நடைபெற்றது. இதில் இந்தியா முழுவதுமிருந்து பல்வேறு மாநிலங்களின் மாவட்ட ஆளுநர்கள் கலந்துகொண்டார்கள். இந்த மாநாட்டில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்த மாநாட்டில் தமிழகத்திலிருந்து பதினைந்து மாவட்ட ஆளுநர்கள் மட்டுமே கலந்துகொண்டதாக கூறப்படுகிறது. மீதமுள்ள பதினைந்து மாவட்ட ஆளுநர்கள் பிரதமர் கூட்டிய மாநாட்டை புறக்கணித்து விட்டனர். தமிழகத்தைச் சேர்ந்த சுமார் பதினைந்து மாவட்ட ஆளுநர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் கூட்டிய மாநாட்டை பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று மேலிடம் பிறப்பித்த உத்தரவே இதற்குக் காரணமாம்.

## தீவிரவாதிகள் தாக்குதல் நான்கு இராணுவம் பலி

(ஸ்ரீநகர்)

இந்திய காஷ்மீர் மாநிலம் ரஜோரி மாவட்டம் தர்மசால் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக ரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து அவர்களைத் தேடியழிக்க இராணுவத்தினர் சென்றனர். அப்போது காட்டுக்குள் பதுங்கி இருந்த தீவிரவாதிகள், இராணுவத்தினரை நோக்கி வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடாத்தினார்கள். இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடாத்தினார்கள்.

இந்தப்பயங்கர சண்டையில் மேஜர் ஒருவர் உட்பட நான்கு இராணுவ வீரர்கள் பலியானார்கள். மேலும் நான்குபேர் படுகாயமடைந்தனர்.

## கொலைக் குற்றச்சாட்டின் பேரில் சட்டமன்ற உறுப்பினரின் பதவிபறிப்பு

கொலை வழக்கில் ஆயுள்தண்டனை பெற்ற சமாஜ்வாடி கட்சி சட்டமன்ற உறுப்பினரின் பதவியைப் பறிக்க ஆளுநர் உத்தரவிட்டார். உத்தரப்பிரதேச மாநிலம் ஆராய் தொகுதி உறுப்பினர்உதய்பான் சிங் 2002 ஆம் ஆண்டு நடந்த உத்தரபிரதேச சட்டசபைத்தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பிறகு அந்தக் கட்சியில் இருந்து விலகி ஆளும் கட்சியான சமாஜ்வாடி கட்சியில் இணைந்தார்.

1999 ஆம் ஆண்டு சூரிய நாராயண சுக்லா மற்றும் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் உதய்பான் சிங்மீது கொலை குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்று அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. இதனையடுத்து உதய்பான் சிங் வாரணாசி சிறையில் தண்டனையை அனுபவித்து வருகிறார். அவரது மேல் முறையீட்டு மனுவை உயர்நீதிமன்று தள்ளுபடி செய்துவிட்டது.

கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ளதால் உதய்பானுசிங்கின் பதவியை பறிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனை அடுத்து உதய்பான் சிங்கின் பதவியை பறிக்க ஆளுநர் ராஜேஷ்வர் உத்தரவிட்டார். ஜனவரி 28ஆம் திகதி முதல் இந்தப் பதவி ரத்து அமுலுக்கு வருவதாகவும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.




## புதூர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

## அறிவித்தல்

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய விநாயகர் பெருமானுக்கு கும்பாபிஷேக நிகழ்வு 01.06.2005 புதன்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து 06.06.2005 திங்கட்கிழமை வழமையான வருடாந்த உற்சவதினம் நடைபெறும். ஆலய வீதியில் வாணிபம் செய்வோர் தங்களுக்கான இடங்களை 01ஆம், 02ஆம் திகதிகளில் ஆலய பரிபாலன சபையினருடன்தொடர்புகொள்ளவும். இவ் ஆலயத்திற்கென வெளியிடங்களில் பணம் தண்டி வருபவர்களுக்கு அடியார்கள் பணம் வழங்க வேண்டாமென ஆலய பரிபாலன சபையினர் தங்களுக்கு அறியத் தருகின்றோம்

"நன்றி"

இ.பூலோகசிங்கம்.
செயலாளர்,
புதூர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய
பரிபாலனசபை, புதூர்.

(சி.1191)



# அப்ரிடி சிறப்பு பந்துவீச்சு தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்



மேற்கிந்திய தீவுகளின் சென்லூசியாவில் நடைபெற்ற அந்நாட்டுடனான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 40 ஓட்டங்களால் வென்று ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடப்பணித்தது. அதன்படி முதலில் களமிறங்கிய அதிரடி வீரர் அப்ரிடியும் சல்மான்பட்டும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் இன்சமாமும் சொகைப் மாலிக்கும் தலா 51 ஓட்டங்களைப் பெற்றதால் 50 ஓவர் முடிவில் எட்டுவிக்கெட்டுக்களையிழந்த பாகிஸ்தான் 258 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 259 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்திய தீவு சயிட் அப்ரிடியின் சுழல் பந்துவீச்சு காரணமாக 218 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அணித்தலைவர் சந்தர்போல் 17 ஓட்டத்துடனும் சர்வான் மூன்று ஓட்டத்துடனும் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர். எனினும் அவ்வணியின் மோர்ட் டன் தனது முதலாவது அரைச் சதத்தைப் பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் அப்ரிடி அபாரமாக பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் 2-0 என்ற நிலையில் தொடரைக் கைப்பற்றியது.

# ரேஜெனிங்சில் கண் வைக்கிறது சிறிலங்கா கிரிக்கெட் சபை




இந்திய கிரிக்கெட் பயிற்றுநராக கிறேக் ஷெப்பல் நியமிக்கப் பட்டதும் சிறிலங்காவின் பயிற்றுநராக ரொம் மோடி நியமிக்கப்படும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியான போதும் தற்போது தென்னாபிரிக்க பயிற்றுநராக இருந்து நீக்கப்பட்ட ரேஜெனிங்ஸ்சை பயிற்றுநராகக் கருத்திற்கொள்ளப்பட்டிருப்பதாக இடைக்கால கிரிக்கெட்சபைத் தலைவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் சிறிலங்கா கிரிக்கெட் சபைத் தலைவராக முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனரணதுங்க நியமிக்கப்படலாம் என்றும் அவர் புதிய சபையை மேற்பார்வை செய்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த சபையில் மேலும் முன்னாள் வீரர்கள் ஒன்பது பேர் அங்கம் வகிப்பர் என தர்மதாச தெரிவித்துள்ளார்.



மிலனில் நடந்த 'இத்தாலியன் சீரிஸ் ஏ' கால்பந்து போட்டியில் ஏ.சி.மிலன் அணி வீரர் விகோறிஷ் டோரகு(வலது), பாலெர்மோ அணி வீரர் லாம் பெர்டோ ஜாலி இருவரும் பந்தை தட்டிச் செல்ல முனைகின்றனர். இந்தப் போட்டி 3-3 என்ற கோல் கணக்கில் சமனானது.

# கிளிஜர்ஸ் பங்கேற்பது உறுதி



பிரான்சில் இன்று ஆரம்பமாகும் பிரஞ் ஓபன் பெண்களுக்கான டென்னிஸ் தொடரில் பெல்ஜிய வீராங்கனையான கிம் கிளிஜர்ஸ் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2001, 2003 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இத்தொடரில் வெற்றி பெற்று உலகத் தரவரிசையில் முன்னிலை வகிக்கும் இவர் அண்மையில் முழங்காலில் காயம் ஏற்பட்டதால் போட்டிகளில் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமானதாக இருந்தது. எனினும் இதனைக் கருத்திற் கொள்ளாமல் தான் இந்தப் போட்டியில் பங்கேற்கவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களாக ஓய்வில் இருந்து கடந்த பெப்ரவரியில் களத்துக்கு வந்த இவர் பசுபிக் லைப் ஓபன், நாஸ்டாக் -100 ஆகிய கிண்ணங்களை கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக்கோப்பை டென்னிஸ் இறுதிப் போட்டியில் ஜேர்மனி

உலகக் கோப்பை டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் அணியை வீழ்த்தி ஜேர்மனி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. ஜேர்மனியின் டஸ்சல்டார்ப் நகரில் உலகக் கோப்பை டென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் மோதின. முதல் ஒற்றையர் போட்டியில் ஸ்பெயினின் டாமி ரர்ரிடோ 7-6,6-4 என்ற செட்களில் ஜேர்மனியின் டாமி ஹாசை வென்றார். அடுத்த போட்டியில் ஜேர்மனியின் புளோரியன் மேயர் 6-3,6-7,6-3 என்ற செட்களில் ஸ்பெயினின் டேவிட் பெரரரை வென்று சமன் செய்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது போட்டியில் அபாரமாக ஆடிய ஜேர்மனியின் ஹாஸ், அலெக்சாண்டர் வாஸ்கே ஜோடி 7-6,6-3 என்ற செட்களில் ஸ்பெயினின் ராப்ரிடோ, வென்டுரா ஜோடியை வென்றது. இதன் மூலம் ஜேர்மனி 2-1 என்ற முன்னிலையில் ஸ்பெயினை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.






ஐரோப்பியாவில் நடைபெற்ற எப்.ஏ.கிண்ணத்துக்கான கால்பந்து இறுதியாட்டத்தில் ஆர்சனல் மான்யூனைட்டைட்டை தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது.



சர்வதேச கால்பந்து சம்மேளனம் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதற்காக ஜுரிச்சில் நடந்த விழாவில் பீபா தலைவர் ஜோசப் பிளாட்டருக்கு அவரது உருவம் பொறித்த 'பதக்கம்' ஒன்றை சீன கால் பந்து சங்கம் அன்பளிப்பாக அளித்தது.

# மின்னொளியில் கால்பந்துப் போட்டி சம்பியனானது வித்தியா அணி

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடாத்திய மின்னொளியிலான கால்பந்து இறுதிப் போட்டியில் முள்ளியவளை வித்தியா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியை எதிர்த்து வித்தியா அணி மோதியது

முன்னதாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.துயானந்தா, முல்லை மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுத் தலைவர் ஜான், விக்கினேஸ்வரா விளையாட்டுக்குழுத் தலைவர் தர்மசீலன், பாண்டியன் வாணிபப் பொறுப்பாளர் துன்பன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தனர். (08)

# சிறுவர் பூங்கா சிறார்களின் மெய்வன்மை திறனாய்வு



தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன், ஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் கலைமகள் சிறுவர் பூங்கா சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு நிகழ்வு கடந்த சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சிறார்களின் அணிவகுப்புடன் பூங்கா நிர்வாகி செல்வி பரமநாயகி பத்திநாதர் தலைமையில் ஆரம்பமானது. இதில் சிறப்பு நிகழ்வாக சிறார்களின் இசையும், அசைவும் இடம் பெற்றது. தொடர்ந்து பழையமாணவர் நிகழ்வு, உத்தியோகத்தர் நிகழ்வு, பணியாளர் நிகழ்வு, பெற்றார் நிகழ்வு இடம் பெற்றது.

சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இறுதியாக பூங்கா பெற்றார் சங்கத் தலைவியின் நன்றியுரையுடன் 6.30 மணிக்கு நிறைவுபெற்றது.

# மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வு

தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையில் இயங்கிவரும் மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றன.

பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இவ் விளையாட்டு நிகழ்வு,பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைக்க, போட்டிகள் ஆரம்பமாகின. ஒலிம்பிக் தீபமேற்றலையடுத்து ஐந்து வயதுப் பிரிவினர் மற்றும் கீழ்ப் பிரிவினரென சிறார்கள் அணிகளாகப் பிரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் ஓட்ட நிகழ்வுகள், நரி ஓட்டம், தாரா நடை, பலூன் உடைத்தல், கம்படி மற்றும் உடற்பயிற்சி நிகழ்வாக இசையும், அசைவும் நிகழ்வுகள் என்பனவற்றோடு, சிறப்பு நிகழ்வாக சங்கீதக் கதிரை நிகழ்வு மற்றும் வினோத உடைப் போட்டிகள் என்பன இடம்பெற்றன. அத்தோடு பெற்றோர்களுக்கான விளையாட்டு நிகழ்வும் நடுவர்களுக்கான நிகழ்வும் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச)



(படம் : சசி)



## சிந்தனைக்கு

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்; அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க் கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்ச மாகி எமது மாவீரர்களின் கனவை நன வாக்கும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# எல்லையிடப்படாவிடில்...!

தமிழ் மக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம் பிக்கக்கோரியும், சுனாமி அனர்த்த மீள்கட்டமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குமாறு கோரியும் அரசிற்கெதிரான வெகு சனப்போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கையில் சிறிலங்கா ஆட்சியாளர்களோ சமாதானச் சூழ்நிலைகளையும், யுத்தநிறுத் தத்தையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் தமது நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஒரு மாதகாலத்திற்குள் மாவட்ட ரீதியில் தொடர்ச்சியான வெகுசனப்போராட்டங்கள் தமிழ் மக்களினால் நடத்தப்பட்டன. கடந்த மூன்றாண்டுகால யுத்தநிறுத்தமானது. தமது பிரச்சினைகள் எவற்றிற்கும் தீர்வுகாணவில்லை என்பதையும், அரசாங்கம் அவற் றைத்தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எதனையும், முன்னெடுக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவே இப்போராட்டங்கள் அமைந்திருந்தன.

அத்தோடு, இப் போராட்டங்கள் மக்கள் பொறுமையின் எல்லைக் கோட்டை எட்டிவிட்டார்கள் என்பதையும் வெளிக்காட்டுவதாக இருந் தன. மக்கள் ஏற்கனவே அரசுமீது நம்பிக்கை இழந்து வெறுப்படைந் திருந்தாலும் சுனாமிஅனர்த்தத்தினால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கம் பொதுக்கட்டமைப்பின் ஊடாக மனிதாபிமானப் பணிகள் விடயத்திலாவது ஒரு முன்னேற்றகரமான செயற்பாட்டினை மேற்கொள்ளும், இது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்கும் எனவும் எதிர்பார்த்தனர்.

மக்களின் இவ் எதிர்பார்க்கையானது சிறிலங்கா அரசாங்கமோ அன்றி பௌத்த-சிங்களப் பேரினவாதமோ மனிதாபிமான உதவி களையாவது செய்யும் என்ற எதிர்பார்க்கையினால் - அதாவது மனிதாபிமான விடயத்தில் இனவாதத்தை மறந்து செயற்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உருவானதல்ல. சர்வதேச சமூகம் இவ் விடயத்தில் காட்டிய அக்கறையினால் - தமிழ் மக்களின் கோரிக் கையில் உள்ள நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் புரிந்துகொண்ட தினால் ஏற்பட்டதாகும்.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ,பௌத்த சிங்கள பேரின வாத சக்திகளோ அதனைப் பொருட்படுத்தவில்லை. இதனை வேறு விதமாகக் கூறினால் சிறிலங்காவிற்கு இன்று நிதியுதவிசெய்வோர் கூறியும் கூட இதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆட்சியில் முக்கிய பங்களிகளான ஜே.வி.பி.யினர் இதனை வெளிப்படையாகவே நிராகரித்தனர். அதாவது உதவிவழங்குவோர் வற்புறுத்தலை ஒரு பொருட்டாகவே ஆட்சியாளர்கள் மதிக்கவில்லை. ஒருவகையில் கேவ லப்படுத்தினர் என்றே கூறுதல்வேண்டும்.

இந்த வகையில் தமிழ் மக்களின் கோரிக்கைகள், உதவிவழங்கு வோரின் வற்புறுத்தல்களையும் ஓரம் தள்ளியுள்ள அரசாங்கம், இவற்றிற்கு மாறான வகையில் யுத்த நிறுத்தத்தையே கேள்விக்குள் ளாக்கும் வகையில்-அதாவது இயல்பு வாழ்க்கைக்கு பங்கம் விளை விக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதாவது அமைதிக்கும், யுத்த நிறுத்தத்திற்கும் கேடு விளைவிக்கும் செயற் பாடுகளுக்குத் தூண்டுதலாகவும், உந்து கோலாகவும் செயற்பட்டு வருகின்றது.

இந்த வகையிலேயே திருமலைநகரில் புத்தர்சிலை ஒன்றை அமைத்த பௌத்த -சிங்கள இன வெறி சக்திகளுக்கு சிறிலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு அளித்தனர். நீதி மன் றம் சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டபோதும் அதற்குப் பொலிசார் பாதுகாப்பு அளித்ததோடு வன்முறையில் ஈடுபட்டசிங்களக் காடையர் கூட்டத் திற்கு பாதுகாப்பும், உதவியும் புரிந்தனர்.

தமிழர் தாயகப்பகுதியில் ஒரு புத்தரின் சிலையையோ அன்றி ஒரு விகாரையையோ அமைத்தல் என்பது ஒரு மத வழி பாட்டுடன் மட்டும் சம்பந்தப்பட்டவிவகாரமல்ல இதனை தமிழர் தாயகத்தில் ஒரு ஆக்கிரமிப்பிற்கான தொரு சின்னத்தை நிறுவுதல் என்றே பொருள் கொள்ளத்தக்கது. இந்நிலையைத் தோற்றுவித்தவர்கள் தமிழர்கள அல்ல. அவற்றை ஆக்கிரமிப்பின் சின்னமாக வெளிப் படுத்திவந்தவர்கள் சிங்களவர்களே.

இந்தவகையில் ஒருபுறம் பேரினவாதிகள் அமைதியைச் சீர் குலைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கையில் - மறு புறத்தில் புலிகளுகக்கு எதிரான மறைமுகப் போரையும் சிறி லங்கா அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இன்று மட்டு, அம்பாறை மாவட் டங்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

கடந்த இரு தினங்களில் (20ஆம்,21ஆம் திகதிகளில்) மட்டு. அம் பாறை மாவட்டங்களில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள விடு தலைப்புலிகளின் இரு அரசியல்துறை அலுவலகங்கள் மீது தாக்கு தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் மூன்று போராளிகள் காயமடைந் துள்ள அதேவேளை, வயோதிபப்பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டு முள்ளார். அதாவது போராளிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் பயணிக்கும் போது மேற்கொள்ளப்பட்டுவந்த தாக்குதல்கள் தற் பொழுது அவர்களின் அலுவலகங்கள் மீது நடத்தும் நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த வகையில் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை சனநாயக வழிமுறைக்கு உட்பட்டவிதத்தில் வெளிப்படுத்திவருகையில் சிறிலங்கா அரசும், பேரினவாத சக்திகளும் வன்முறைகள் மூலமும் இராணுவச் செயற்பாடுகள் மூலமும் அமைதிக்குப்பங்கம் விளைவிக் கும் செயற் பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், அரசின் இப்போக்கிற்கு விரை வில் எல்லையிடப்படாதுவிடடால் தமிழ் மக்களும் தமது எதிர்ப்பை சாத்வீக ரீதிக்கு அப்பாற்பட்ட வகையில் வெளிப்படுத்துவது தவிர்க் கப்படமுடியாததாகிவிடும். இது சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு ஆரோக்கியமானதாக இருக்கமாட்டாது என்பதை கடந்த கால அனுப வங்களே வெளிப்படுத்தப்போதுமானவையாகும்.

# ஜே.வி.பி யினரை கண்காணிக்க சனாதிபதி இரகசிய உத்தரவு

(கொழும்பு)

ஜே.வி.பியினரின் நடவடிக்கை களை கண்காணித்து வாரத்திற்கு ஒரு தடவை முழுவிபரங்களையும் சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா சனா திபதி இரகசிய பணிப்புரை ஒன்றை வழங்கியுள்ளார். சனாதிபதியினால் பொலிஸ், இராணுவம், இராணுவ புலனாய்வு, தேசிய புலனாய்வுத்துறை யினருக்கு இந்த இரகசியப் பணிப் புரை வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது விடுதலைப் புலி களுக்கும் அரசுக்கும் இடையில் ஏற் படுத்தப்படவிருக்கும் புனர்நிர்மாண கட்டமைப்புவேலைகள் சம்பந்தமாக ஜே.வி.பியினர் நாட்டில் எதிர்ப்பு பிரச் சாரங்களை செய்து வருகின்றனர். இது சம்பந்தமாக தற்பொழுது முழு விபரங்களையும் தேசிய புலனாய்வு துறையினர் சனாதிபதியிடம் சமர்ப் பித்துள்ளனர். விசேடமாக பாடசா லைகளில் ஜே.வி.பியினர் மாணவர் குழுக்களை ஏற்படுத்தியுள்ள நடவ டிக்கைகள் சம்பந்தமாக சனாதி பதிக்கு புலனாய்வு துறையினர் அறி வித்துள்ளனர். ஜே.வி.பியினரின் போக்குவரத்துக்கள் மற்றும் அவர்க ளின் நடவடிக்கைகள் குறித்தும் புல னாய்வுத்துறையினரால் கண்காணிக் கப்பட்டு வருகின்றது.

# பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக புலிகளுடன் பேச்சுக்கள்இடம்பெறுகின்றன

## -சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர்.

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப் பொன்றை உருவாக்குதவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான செயல கத்தின் பணிப்பாளர் ஜயந்த தன பால தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கட்டமைப்புத் தொடர்பான கருத் தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜயந்த தன பால இந்தத் தகவலை வெளியிட் டுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பில் மனித உரிமைகள் தொடர்பான விடயங் களை உள்ளடக்குவதற்கு விடுத லைப்புலிகள் மறுப்புத் தெரிவித் துள்ளனர்.

எனினும் இந்த அமைப்பில் பெண்களும் இணைத்துக் கொள் ளப்பட வேண்டுமெனும் அரசாங்கத் தின் கோரிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பத்துப்பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பிற்கான குழுவில் ஐந்து விடுதலைப் புலிகள் உறுப்பினர் களும், முஸ்லிம் பிரநிதிநிதிகளும் உள்ளடங்குவார்கள்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு எந்த அமைச்சின் கீழ் இயங்கும் என்பதை சனாதிபதியே தீர்மானிப் பார் அந்த அமைச்சே பாராளுமன் றத்திற்கு பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பதில் கூறவேண்டும்.

பொதுக்கட்டமைப்பில் இரண்டு சர்வதேச நிறுவனங்கள் அங்கம் வகிக்கும் ஆனால் அவற்றிற்கு வாக்குரிமை கிடையாது.

எனினும், அவர்கள் இரு தரப் பினருக்குமிடையில் பார்வையாள ராகச் செயற்படமுடியும் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு முப்படைகளின் தளபதியும் இணக்கம் தெரிவித் துள்ளனர் என சிறிலங்கா சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுக்கட்டமைப்பை அமுல் செய்தால் நாட்டில் சமாதானம் ஏற்படும் - டி.எம்.ஜெயரத்ன

(கொழும்பு)

விடுதலைப்புலிகளும் அரசும் இணைந்த ஒரு பொதுக் கட்ட மைப்பு தயார் செய்யப்பட்டுள் ளது. இந்தப் பொதுக் கட்டமைப்பை அமுல் படுத்துவதால் நாடு பொரு ளாதாரத்தில் முன்னேற்றம் காணும், நாட்டில் சமாதானம் ஏற்படும் என ஐக்கிய சுதந்திர முன்னணி அரசின் பிரதம செயலாளர் டி.எம்.ஜெய ரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானத்திற்கு ஒரு தீங்கும் ஏற்படாது. இது பாதிக்கப் பட்ட மக்களின் நலன்களை கவ னிப்பதற்கே இக்கட்டமைப்பு மேற் கொள்ளப்படும்.

சிலர் தங்களது சுய அரசியல் லாபம் கருதி இதை எதிர்க்கின்ற னர். இவர்கள் நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ,கவலைப்படு வதில்லை நாட்டை கட்டியெழுப்ப இவர்கள் முன்வரவேண்டும். அதை தவிர்த்து வீணாக கூச்சல் இடுவ தில் எந்தப்பலனும் ஏற்படாது என் பதை இவர்கள் வெகு விரைவில் உணர்வார்கள் என ஜெயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## சந்திரிகா சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால்

# அரசியல் யாப்பை மாற்றுவதற்கு ஐ.தே.க.ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

சந்திரிகா மூன்றாவது தடவை யும் சனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுவதற்கு உத்தேசிப்பாரானால் அரசியல் யாப்பை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதர வையும் வழங்குமென ஐக்கிய தேசி யக் கட்சி பிரதி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

ஒருவர் இரண்டு தடவைகள் மாத்திரம் சனாதிபதி பதவியை வகிக்கமுடியும் மூன்றாவது தடவை அவர் போட்டியிடுவரானால் அரசி யல் யாப்பை மாற்றினால் போது மானதாகும்.

ஆகையால் இது சம்பந்தமாக தேர்தலுக்கோ அல்லது சர்வசன வாக்கெடுப்பிற்கோ செல்லத் தேவை ஏற்படாது. அரசியல் யாப்பை மாற்றுவதற்கு மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகள் பாராளு மன்றில் தேவைப்படுகின்ற காரணத் தால் அதற்கான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி வழங்குவதற்கு தயா ராகவுள்ளது என பிரதி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரி வித்துள்ளார்.

# சிறிலங்காவில் புதிய தேர்தல் முறை அடுத்த ஆண்டு அமுலுக்கு வரும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறை யில் இருக்கும் விகிதாசார தேர்தல் முறையையும் முன்னர் அமுலில் இருந்த தொகுதி அடிப்படை தேர் தல் முறையையும் இணைந்து புதிய தேர்தல் முறையை அமுல்படுத்து வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள் ளது.

இந்தத் தேர்தல் முறையை 2006 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் நடைமுறைப்படுத்துவ தற்கு அரசு தீர்மானம் மேற்கொண் டுள்ளது.

இதை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத் தேர்தல் குழு சிபார்சு செய்துள்ளது இதற்கு சகல அரசி யல் கட்சித் தலைவர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அமைச்சர்குழு கலந்தாலோசனை செய்து வரு கின்றது. வெகு விரைவில் இப்பிரே ரணையை பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

# படையினரின் வெசாக் பண்டிகையை புறக்கணிக்க மக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா படையினர் முன்னெடுக்கும் வெசாக் கொண்டாட்டத்தினை பொதுமக்கள் புறக்கணிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தன்மானத் தமிழர் பேரவை மற்றும் யாழ்.மாவட்ட தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்பன இவ்வேண்டுகோளை விடுத்துள்ளன.

இது தொடர்பாக அறிக்கைகளை அவ்வமைப்புக்கள் வெளியிட்டுள்ளன. சிறிலங்கா அரசு காலங்காலமாகப் பௌத்த மதத்தின் பெயராலேயே சிறுபான்மை இனங்களின் மீதும் மதங்களின் மீதும் அதிகாரம் செலுத்தி வந்துள்ளது. அதனாலேயே படையினர் கொண்டாடும் வெசாக் பண்டிகையில் கலந்துகொள்வதன் மூலம் அரசினதும் படையினதும் எதிர்பார்க்கைகளுக்கு துணை போக வேண்டாம் என்று எம் தமிழ் உறவுகளைக் கேட்டுக்கொள்கிறோமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (33)

# சிவராமின் கொலையை கண்டித்து ஹட்டனில் எதிர்ப்புக் கூட்டம்

(கொழும்பு)
ஊடகவியலாளர் சிவராமின் கொலையைக் கண்டித்து நேற்று ஹட்டனில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.மலையக மக்கள் முன்னணி உட்பட்ட ஏனைய கட்சிகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பன இதில் பங்கேற்றன.

வெசாக் பண்டிகையை காரணம் காட்டி இந்த எதிர்ப்புக் கூட்டத்தின் போது ஒலிப்பெருக்கி மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு பொலிசார் அனுமதி வழங்கவில்லை.

கூட்டத்தின்போது உரையாற்றிய மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலர் எஸ்.அருள்சாமி தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நாட்டில் பாதுகாப்பற்ற நிலைதோன்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(32)

# மின்சார சபை மீளமைப்பு யோசனை; 75 வீத பணிகள் பூர்த்தி

(கொழும்பு)
மின்சார சபையை மீளமைக்கும் திட்டம் தொடர்பான யோசனைகள் தற்சமயம் விவாதத்திற்குட்படுத்தப்பட்டு வருவதாக மின்சார சபை தொழிற்சங்கத் தலைவர் ஆனந்த குணரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதமருடன் இடம்பெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் மின்சார சபையை தனியார் மயப்படுத்தாமல் மீள் அமைப்பு செய்யும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம் சுமார் 75 வீத பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் அடிப்படையில் எதிர்வரும் புதன்கிழமையன்று தாம் எரிபொருள் துறை அமைச்சரிடம் குறித்த யோசனைகளை கையளிக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

தமது யோசனையின்படி மின்சார சபையில் மாற்றங்கள் இல்லாதபோதும் அதன் கீழ் வரும் பிரிவுகளில் சுயாதீன தன்மையை பேணும் வகையில் தமது யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷவின் சனாதிபதி போட்டிக்கு சிறிசேன கூரே உதவுவாராம்

(கொழும்பு)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் சனாதிபதி தேர்தல் கள நிலைப்பாட்டுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் முக்கியஸ்தர் சிறிசேன கூரே உதவ முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அண்மையில் சிறிசேன கூரேயும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் இரண்டு மணிநேரம் அலரி மாளிகையில் பேச்சு நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்த வரையில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தேர்தல் பிரசாரங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ இன்னும் இது குறித்து ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை. சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஒரு தரப்பு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக அங்கீகரிக்க உடன்பட்டுள்ளது. அமைச்சர் அனுரா பண்டார நாயக்கவும் இந்த வேட்பாளர் நிலைக்கு தம்மை தயார்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே பிரதமருக்கும் சிறிசேன கூரேக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (32)

# குழு மோதல் இருவர் காயம்

(கொழும்பு)
பொலநறுவை சுங்காவில் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் இருவர் காயமடைந்தனர். நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தக் குழு மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நான்கு சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)
தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பும் வேளையில் நெடுந்தீவு கடற்பரப்பில் மூழ்கி உயிரிழந்த எட்டுப் பேரது சடலங்களில் நால்வரது சடலங்களே உறவினர்களால் அடையாளங்காட்டப்பட்டுள்ளன. எஞ்சிய சடலங்கள் தொடர்ந்தும் அடையாளங் காணப்படுவதற்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே மிக மோசமாக இச் சடலங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் பிரேத அறையை அண்டிய பகுதியெங்கும் துர்நாற்றம் வீசி வருகின்றது. இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் யாழ்.நீதவானது கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அச் சடலங்களை இன்று அரச செலவில் அடக்கஞ் செய்ய உத்தரவிட்டுள்ளது. (27)

# மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை கோரிக்கை

(கொழும்பு)
மின்சாரக்கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

அண்மையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து தமக்கு நட்டம் அதிகளவில் ஏற்பட்டு வருவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. மின்சார சபையானது அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 10ரூபா 60 சதத்தை செலவிடுகின்ற போதும் 9 ரூபா 90 சதத்துக்கே பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கிறது.

எனவே நாள் ஒன்றுக்கு பல மில்லியன் ரூபாய்களால் அது நட்டமடைகிறது.இந்த நிலையில் தற்சமயம் மின்சார சபைக்கு 3300 மில்லியன் ரூபாவுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே மின்சார விநியோகத்தை மேற்கொள்ள வேண்டுமானால் மின்சாரக் கட்டணத்தில் 20 வீத அதிகரிப்பை மேற்கொள்வது அவசியம் என மின்சார சபை தெரிவித்துள்ளது. (32)

# முழங்காவில் பிரதேசத்தில் வீரமுரசு–மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)
முழங்காவில் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் வீரமு - நிகழ்வும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 25ஆம திகதியன்று பிற்பகல் 4.00மணிக்கு நடைபெறவுள்ளது.

முழங்காவில் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச்செயலர் நவரட்ணம் தலைமையில் ஜெயபுரம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தென்மராட்சி விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து சந்திப்பு

(தென்மராட்சி)
யாழ். தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் முக்கிய சந்திப்பு ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதில் தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் எதிர்கொள்ளும் தொழில் ரீதியிலான பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வு காணப்படவுள்ளது.

எனவே, தென்மராட்சிப் பகுதி விவசாயிகளை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

## படையினரின்...

அமைந்துள்ளது. இது வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. 1995 ஆம் ஆண்டு யாழில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நின்றது முதல் எனது நிலம் உள்ளடங்கிய பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறிவித்தது. இந்தப் பகுதியில் இரு உணவகங்களும் உள்ளன. பொதுமக்களும் அப்பகுதி வாழ் மக்களும் எமது நிலத்திற்குள் நுழைய முடியாத வகையில் தடுப்பரண்கள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்திற்குப் பின்பு அமைதிப் பேச்சுக்கள் நடந்த சூழலிலும் சில தடுப்பரண்கள் அகற்றப்பட்டபோதும் அப்பகுதியில் எம்மால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. இது குறித்து பலமுறை [illegible]ரிடம் முறைப்பாடு செய்துள் [illegible] நிலத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் தடுப்பரண்களை அமைத்துக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தோம். இருந்தபோதும் எமக்கு எமது நிலத்தில் நுழைவதற்கான அனுமதியை சிறிலங்கா இராணுவம் மறுத்து வருகிறது. இது சிறிலங்காவின் அரசியல் யாப்பின் 12(1) ஆம் பிரிவு எமக்கு அளித்துள்ள அடிப்படை உரிமையை மீறுகிற செயலாகும். ஆதலால் இந்த வழக்கில் முதல் மற்றும் 2ஆம் எதிர்தரப்பினராக எம்மால் குற்றம் சாட்டப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவத் தளபதி மற்றும் யாழ்., பளை இராணுவப் பாதுகாப்புப் படையினருக்கு தடுப்பரண்களை அகற்றவும் எமது நிலத்தை எமது பயன்பாட்டிற்குபயன்படுத்த அனுமதிக்கவும் உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுகிறேன் என்று அம் மனுவில் கூறப்பட்டுள்ளது.

## திருமலையில்..

தப்பட்ட ஒருதரப்பான முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத் தலைவர் கீர்த்தி பிரியலால், மற்றும் பௌத்த துறவிகளின் பங்கேற்பின்றி, தீர்க்கமான முடிவேதும் எடுக்கப்படாமலே நிறைவடைந்தது.

இந்த நிலையில், வெசாக் தினத்தை முன்னிட்டு தமது பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை மூன்று நாட்களுக்கு ஒத்திவைக்க திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை முன்வந்துள்ளது. எனினும், திருகோணமலை நகரில் திடீரென அமைக்கப்பட்ட புத்தர்சிலை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அங்கிருந்து அகற்றப்படாவிட்டால் தமது போராட்டம் தொடரும் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. இது இவ்விதமிருக்க திருகோணமலைச் சம்பவங்களைக் கண்டித்து வியாழன் வடக்கு கிழக்கு முழுவதும் பூரண கடையடைப்பு பணிப்புறக் கணிப்புப் போராட்டம் அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கருணா...

குறித்த வாகனத்தை மறித்து சோதனை நடத்திய பொலிசார் சாரதி மீது சந்தேகம் ஏற்பட்டதையடுத்து அனைவரையும் சோதனையிட்ட போது ஒருவரின் சப்பாத்து கால் உறையில் [illegible]கப்பட்ட நிலையில் கைத்துப்பாக்[illegible]யும், அதற்கான ரவைகளும் இருந்ததையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நால்வரையும் நேற்று மாலை புத்தளம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## திருகோணமலை...

நடத்த சனிக்கிழமை திருகோணமலை வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தலைமையிலான குழுவினர் கடற்படைத் தளத்தலைமையகத்தில் நடத்தப்பட்டமாநாட்டின் பின்னர் திருகோணமலை ஐயசுமணாராமய பௌத்த விகாரையில் பௌத்த மத குருமார்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். புத்தர் சிலை நிறுவப்பட்டதால் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பதற்கான வழிவகைகள் பற்றி அப்போது ஆராயப்பட்டது. முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் அதில் கலந்து கொண்டனர். அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் தலைமையிலான தளபதிகள் குழு பேருந்து நிலையத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர்.

இதேவேளை சனிக்கிழமை இரவு அநுராதபுரம்-அன்புவழிபுரம் சந்திப் பகுதியில் கிரனேட் ஒன்று வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சேதமெதுவும் ஏற்படவில்லை. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் தகவல் கிடைத்து அந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர் என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (25,32)

## எழுத்தாளர்...

ஆரம்ப காலம் முதலே தமிழீழத் தேசிய உணர்வு மிக்கவராக விளங்கிய இவர் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலை நெஞ்சார ஏற்றுக் கொண்டவராவார். பல படைப்பாளிகள் போராட்டத்தைப் பதிவு செய்யத் தயங்கிய காலத்திலேயே தனது படைப்புக்களில் வெளிப்படையாகவே போராட்டத்தின் நியாயங்களையும் சமூக மேம்பாட்டு விழுமியங்களையும் இவர் பேசிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் கூட விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழக் கல்விக்கழகம், விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவு போன்றவற்றுடன் நெருக்கமான உறவை கொண்டிருந்து தன் எழுத்தாற்றலாலும், ஆழ்ந்த கல்விப் புலமையாலும், இவர் ஆற்றிய பணிகள் காலத்தால் நினைவு கூரத்தக்கவை.

## மூன்று...

இதேவேளை இவர்களிடமிருந்து பத்துக்கு மேற்பட்ட வாகனத் திறப்புகளும் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

## வீரவணக்கம்...

தித்துறை யாழ்ப்பாணம், த.மு இல. 739, சிவிக் சென்ரர், வட்டக்கச்சி) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# தமிழீழ

## பதினொராம் அகவை நிறைவுச்





**பிள்ளையார் புடைவை மாளிகை**
(விக்கினேஸ்வரா புடைவை மாளிகை)
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11943)

**கந்தையா களஞ்சியம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11944)

**அம்மன் வணிகமாளிகை**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11945)

**அன்புமகள் அழகுமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12054)

**கலையரசி நகைமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12053)

**பூந்தளிர் நகைமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12052)

**ஒளிர்க்குமரன் படமாடம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12055)

**அருள்பிள்ளையார் (தில்லை) பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12056)

**தென்னவன் பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12057)

**அறிவுவைரவர் பல்பொருள் வாணிபம்**
முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.
(சி-12066)

**தீன்சுவை வெதுப்பகம்**
முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12065)

**புனித யாகப்பர் பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12064)

# வைப்பகம்

வுச் சிறப்பிதழ்-23.05.2005




**பெருந்திருமகள்**
**ஊர்தி உதிரிகள் வாணிபம்**
(சரஸ்வதி)
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11946)

**கயல்விழி**
**அழகுச்சோலை**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11947)

**நாமகள்**
**அழகுமாடம்**
(ஜனனி)
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11948)

**திருமகள்**
**அழகுச்சோலை**
(ஸ்ரீ அபிராமி)
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12051)

**அப்பன்**
**உதிரிகள் வாணிபம்**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11950)

**திருக்குமரன்**
**புடைவை மாளிகை**
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-11949)

**தீன்சுவை**
**பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12058)

**பூவேந்தன்**
**பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12059)

**துளசி**
**பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12060)

**தேவன்**
**பல்பொருள் வாணிபம்**
முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-12063)

**முல்லைவேந்தன்**
**பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12062)

**காளியம்மன்**
**பல்பொருள் வாணிபம்**
அங்காடி, புதுக்குடியிருப்பு.
(சி-12061)